# எலிப்பொறி

(1)

சொற்களைப்
பின்னிச் செல்கிறேன் -
பாம்பாயிற்று

- பா. சத்தியமோகன்

**டி**யாரா ராஜ்குமார் வெள்ளை நிற வீக் எண்டர் டிசர்ட்டும் அதே நிற பெர்முடா ட்ரவுசரும் அணிந் திருந்தான். டியாரா இரண்டு இஞ்சுகள் உயரம் கூடின கறுப்பு அஜித் குமார். டேக் வான்டோ கராத்தே கற்றவன். துப்பாக்கிகள் கையாள்வதில் நிபுணன்.

ஷோபாவில் ஏறக்குறைய முற்றிருக்கும் போஸ்ச்சரில் சாய்ந்திருந்தான் டியாரா. இட கையில் டிவி ரிமோட் வலது கையில் டின் பியர்.

டி.வி.யில் எம் டிவி. நிகழ்ச்சி ஓடிக் கொண்டிருந்தது. வீடியோ ஜாக்கி ராகேஸ்வரி நிகழ்ச்சியைத் தொகுத் தளித்துக் கொண்டிருந்தாள்.

உள்வாசலில் காலடி அரவம். மையமாகத் திரும்பினான்.

உதவியாளினி தேஜிஸ்வினி. சுருக்கமாய் தேஜி.

நீலநிற ஜீன்ஸ் உடுத்தியிருந்தாள். கையில்லாத இறுக்க மான கறுப்பு சிக்கன உட் சட்டை. அதன் மேல் கறுப்பு சிவப்பு சதுரங்கள் கொண்ட ஸ்லீவ்லெஸ் கோட். வெண்ணெய் வயிறும் சுருண்ட இறால் போல் தொப்புளும் தெரிந்தன. தலைக் கேசத்தைப் பம்பையாய் விரித்து விட்டிருந்தாள்.

"ஹாய் டியாரா!"

"ஹாய் தேஜி!"

எதிரில் அமர்ந்தாள் "எப்பப்பாத்தாலும் சாட்டிலைட் சானல்ஸ்தானா? குறிப்பாக எம் டிவி!"

சிரித்தாள் "ஐ லைக் இட்!"

எம் டிவில உனக்கு எந்த விடியோ ஜாக்கி பிடிக்கும்?

"ராகேஸ்வரிதான் தேஜி!"

"மலாய்க்கா?"

"ம்ஹூம்!"

"ஷெகனாஸ்?"

"ஷெகனாஸின் ஆங்கில உச்சரிப்பு அசத்தல். குழந்தை முகம் போவஸ். ஆனாலும் ராகேஸ்வரிக்கு ஈடு இணையாருமில்லை. வித்தியாசமான குரல் வளம். ஆண்மை தடவிய நெடு நெடு உடம்பு. மயக்கும் சிரிப்பு ஏரோபிக் மார்புகள்!"

முறைத்தாள் தேஜி.

"எப்பப்பார்... சுத்தி சுத்தி அங்கதான் வருவ!"

"பின்ன? துப்பறியும் வேலை சில பல வாரங்களாஇல்ல. புது கேஸ் வந்திட்டா செக்ஸுவல் ஃபேன்டஸிகளை பிடிச்சு கூண்டுக்குள்ள அடைச்சிடுவேன் தேஜி!"

"டியாரா! நேத்து என்னை நினைவூட்டச் சொன்னியே... ஒரு புது நாவலுக்குக் குறிப்புகள் எடுக்க ஒரு நபரைப் பாக்கணும்னு சொன்னியே...."

"ஓ எஸ். ஆன்மீகம் சார்ந்த நாவல். நாம பாக்கப் போற நபரின் பெயர் ஈஸ்வர். சைவ சித்தாந்தம் பற்றி டாக்டரேட் பண்ணியவர். அடையாறில் சர்வ சமய ஆராய்ச்சி மையத்ல பணிபுரிகிறார்!"

"எப்ப அவரைப் பாக்கப் போறம்!"

"இன்னும் ஒரு மணி நேரத்ல!"

"நீ அபிஷியல் ட்ரஸ்ல இல்லையே?"

"மாத்திக்கிட்டாப் போச்சு!"

"உன் மேல பியர் வாடை அடிக்குது. பல் துலக்கிட்டு க்ளோரட்ஸ் போட்டுக் கிட்டு வா தம்பி!"

"சரிக்கா!" எழுந்தான்.



அடுத்த அரை மணி நேரத்தில் ஃபுல்சூட் உடுத்தி திரும்பினான் டியாரா.

நளினமாய் விசிலடித்தாள் தேஜி. "வாவ்!"

இருவரும் ஸாண்ட்ரோ காருக்கு நடந்தனர். காரைக் கிளப்பினான் டியாரா. சாலைப் போக்குவரத்தில் கலந்தான். நடைமேடையில் கல்லூரிப் பெண்கள்.

"ஈவ் டீஸிங் பண்ணினா ஒரு வருஷம் தண்டனைன்னவுடனே ரோட்டோர ரோமியோக்கள் எண்ணிக்கை குறைஞ்சு போச்சு பாத்தியா டியாரா?"

"நம்ம மொட்டைப் பசங்களுக்குப் பெண்கள் ரசிக்கும் வண்ணம் நளினமா பேசத் தெரியலை; நடக்கத் தெரியலை. பழகின பெண்கிட்ட அந்தரங்கமா ஆயிரம் செக்ஸ் பேசலாம். பழகும்வரை பொறுமை இல்லை பசங்களுக்கு"

"இது உன் குருநாதர் எடிட்டர் சங்கரலிங்கம் சொன்ன கோட் பாடா?"

"அ்ஃப் கோர்ஸ்!"

கார் தொடர்ந்து பறந்தது.

கெனால் பேங்க் சாலையில் பாரத் சர்வ சமய ஆராய்ச்சி மையம் எட்டு மாடிக் கட்டடமாய் உயர்ந்திருந்தது.

கட்டடத்தைச் சுற்றியும் வாசலிலும் பலத்த காவல். வெளியே ஆறு பாயின்ட்களிலும் உள்ளே இருபது பாயின்ட்களிலும் க்ளோஸ் சர்க்யூட் கேமிராக்கள் சுழன்று கொண்டிருந்தன.

வாசலில் டோர் பிரேம் மெட்டல் டிடக்டர்.

சம்பிரதாய செக்கிங்குக்குப் பிறகு விசிட்டர் பேட்ச் குத்தி விட்டனர்.

உள்ளே நடந்து கொண்டே வினவினாள் தேஜி. "ஆராய்ச்சி மையம் மத்திய அரசுக்குச் சொந்தமானதா டியாரா?"

"இல்ல. தனியார் மையம் இது சொந்தக்காரர் பெயர் தியானேஸ்வரன், இந்தியாவின் முதன்மையான தத்துவயியல் விஞ்ஞானி. கோடீஸ்வரர்!"

"ஓ!"

"இந்த மையத்தை தியா நிறுவக் காரணம் "தீன் இலாஹி" போன்ற அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய புதிய மதத்தை உருவாக்குவதுதான். உபரியாக "இஸ்லாமியப் பழமைவாதிகளும் தீவிர வாதமும்" என்ற தலைப்பிலும் ஆராய்ச்சி தொடர்கிறார்கள். இயற்கையாகவே தியா நியமித்துள்ள நூற்றுக் கணக்கான இன்டர்வியூவர்ஸ் ப்ரோ இஸ்லாமிக் ஃபண்டமண்டலிஸ்ட்களை அவர்களது நாடுகளுக்குச் சென்று பேட்டி காண்கிறார்கள். இதனால் தியாவுக்கு இஸ்லாமியத் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் அதிகம். குறிப்பாக ஒஸாமா பின்லேடனிடமிருந்து."

''ஆப்பிரிக்க நாடுகளில் இருந்த அமெரிக்கத் தூதரகங்களை வெடிவச்சுத் தகர்த்தவன் இவன்தானே!"

"அதே ஒஸாமாதான். இவனது தலைக்கு அமெரிக்க அரசு அஞ்சு கோடி அமெரிக்கன் டாலர் விலை நிர்ணயிச்சிருக்கு. இப்போது இவன் தெற்கு ஆப்கானிஸ்தானில் ஒளிந்திருப்பதாகக் கேள்வி...."

''ஒஸாமாவுக்குப் பயந்துதான் இங்க இவ்வளவு பாதுகாப்பா?"

"எஸ். இதுவரை எட்டுத் தடவைகள் இந்தக் கட்டடத்தை எலக்ட்ரானிக் ஃப்யூஸ்டு பாம் வச்சு தகர்க்க முயற்சிகள் நடந்திருக்கு. இப்பக் கூட ஏதாவது பாம் மீதுதான் நிக்கிறோமோ என்னவோ!"

துள்ளிக் குதித்தாள் தேஜி! "ஆவ்!"

"ரொம்பக் குதிக்காத . கண்கள் சலனப்படுது"

"நீ ரொம்ப மோசம்பா..."

சிரித்தாள்.

லிப்ட் மூலம் நான்காவது மாடிக்குப் போயினர். மிகப்பெரிய நீண்ட வராண்டா வராண்டா சுவர்களில் நவீன ஓவியங்கள்.

வராண்டாவில் நடுவில் வாசல்.

இவர்கள் முன் அனுமதி பெற்றிருந்ததால் வாசல் திறந்து கொண்டது. உள்ளே.

நாற்பதுக்கும் மேற்பட்ட கம்ப்யூட்டர் டெர்மினல்கள்.



கம்ப்யூட்டர்களின் முன் அமைதியாய் அமர்ந்து யுவன்களும் யுவதிகளும் தத்தம் பணிகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

குளிர் பதன மூட்டப்பட்ட காற்றில் வினோத நறுமணம்.

"என்ன இது புதுவிதமான வாசனை டியாரா?"

"நமக்குத் தெரியாத ரூம் பிரஸ்னராக இருக்கும்!"

அனைத்து டெர்மினல்களும் தியாவின் அறை கம்ப்யூட்டருடன் இணைக்கப்பட்டிருந்தன.

டெர்மினல் ஆசாமிகள் இயந்திரமாய்ப் பணி செய்து கொண்டிருந்தனர். அவர்களது கை கீ போர்டுடனும் மௌஸுடனும். விளையாடிக் கொண்டிருந்தன. கண்காணிப்பாளர் வந்தார்

"டியாரா?"

"எஸ்!"

"யாரப் பாக்கணும் சார்?"

"மிஸ்டர் ஈஸ்வர்!"

"என்ன விஷயம்?"

"நான் புதுசா எழுதப் போற ஒரு ஆன்மீக நாவலுக்கு அவர்கிட்ட குறிப்பு கேட்டிருந்தேன்."

"உங்க நாவல் சிறப்பா அமைய வாழ்த்துகிறேன். (திரும்பு சுட்டி) அதோ அந்த 12-வது டெர்மினலில்தான் இருக்கிறான் ஈஸ்வர். நேற்றிரவிலிருந்தே அவன் பணிபுரிஞ்சிக் கிட்டிருக்கான். அங்க இங்க நகராம போய்ப் பாருங்க!"

நடந்தனர்.

ஈஸ்வர் விரைப்பாய் அமர்ந்திருந்தான்.

கண்கள் திறந்திருந்தன.

இடது கையில் பென்சில், வலது கை மௌஸை இறுக்கிப் பிடித்திருந்தது.

கம்ப்யூட்டர் திரை மிளிர்ந்தது.

மேஜையிலிருந்த இரவு டீ ஆடை படர்ந்து ஜில்லித்திருந்தது.

முகத்து தசைகள் இறுகி மரப்பட்டை நிறம் பூத்திருந்தது.

"என்னது? ஈஸ்வர் அரைத் தூக்கத்தில் இருக்கிறாரா?

சீனர்கள் போல் விழித்துக் கொண்டு தூங்குகிறாரா? இருந்த இடத்தை விட்டு நகராமல் 12 மணி நேரத்துக்கு மேல் எப்படி பணி புரிகிறார்?"

யோசித்தபடி மெதுவாக ஈஸ்வரின் தோளைத் தொட்டான். கண்களைக் குறுக்கித் திடுக்கிட்டான் ஈஸ்வரின் புறங்கையைத் தொட்டான். வெதுவெதுப்பும் இல்லை; ஜில்லிப்பும் இல்லை.

டியாரா திடுக்கிட்டான்.

மனசுக்குள் வெளவால் பண்ணை.

"ஈஸ்வர்! ஈஸ்வர்!" நெற்றியிலிருந்த சந்தனப் பொட்டும் தன் மீதான குங்குமப் பொட்டும் கலைந்திருந்தன. விளிப்புக்கு ஈஸ்வர் அசையவில்லை.

"உயிர் இருக்கிறதா?"

டியாரா குனிந்து ஈஸ்வரின் நாடித் துடிப்பையும் சுவாசத்தையும் ஆராய்ந்தான்.

நாடித் துடிப்பு பலவீனமாய், சுவாசம் அனிச்சையாய்.

டியாரா அழைக்க கண்காணிப்பாளர் ஓடி வந்தார். மற்றவர்களும் குழுமினர்.

கண்காணிப்பாளர் தனது பங்காக ஏதேதோ செய்ய ஈஸ்வர் அசைந்து கொடுக்கவில்லை.

"டியாரா! இதென்ன கூத்து?"

"க்விக் கால் தி மெடிக்கல் பீப்பிள்!"

அடுத்து இருபது நிமிடங்களில் ஆம்புலன்ஸுடன் மருத்துவர் குழுமம் வந்து சேர்ந்தது.

மையத்தின் தலைவர் தியானேஸ்வரனும் வந்து சேர்ந்தார்.

தியா ஈஸ்வர் பரிசோதிக்கும் மருத்துவர்களை ஆயிரம் கேள்விகள் கேட்டுத் துளைத்தார்.

ஸாரி மிஸ்டர் தியானேஸ்வரன், இப்ப எதுவும் சொல்ல முடியாது. மருத்துவப் பரிசோதனைகள் முடிய வேண்டும்!

ஸ்ட்ரெட்ச்சரில் ஈஸ்வர் கடத்தப் பட்டார். செயற்கை சுவாசம் பொருத்தப்பட்டார். ஆம்புலன்ஸ் ஏற்றப்பட்டார்.

ஆம்புலன்சில் டியாரா, தேஜி தொடர்ந்தனர்.



மருத்துவர் குழுமம் ஈஸ்வரை ஆராய்ந்தது.

கம்ப்ளீட் டி-ஹைடிரேஸன்! ஒரு வாரம் முழுக்க உணவும் நீரும் எடுத்துக்காம இருந்தது போலொரு நீர் இழப்பு!

ஈ.ஈ.ஜி. நோயாளி கோமா நிலையில் இருக்கறதைச் சொல்லுது!

"ஆனா நோயாளியின் மூளைப் பகுதியில் எந்தப் பாதிப்பும் இல்லை!"

ஈஸ்வரின் இரத்தம் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது.

இரண்டு மணி நேரப் பரிசோதனைக்குப் பிறகு-

டியாராவிடம் மருத்துவர் குழுமம், "எக்ஸ்ட்ராடினரி கேஸ் பேஷன்ட் ஆழ்ந்த கோமால இருக்கார். ஆனா மருத்துவக் காரணம் இன்னும் அறியப்படல!"

"எத்ன நாள்ல கோமாலயிருந்து மீள்வார்?"

"இப்பச் சொல்லி முடியாது!" உதடு பிதுக்கினர். விலகினர், தேஜி வெளி வராண்டாவில் உலாவினாள்.

மெதுவாக டியாரா ஈஸ்வரிடம் நடந்தான். முகத்துக்கு அருகே முகம் வைத்து வினாவினான். "உனக்கென்னாச்சு ஈஸ்வர்? என்கிட்ட மட்டும் சொல்லேன்!"

அவ்வளவுதான்-

ஈஸ்வரின் கண்கள் திறந்து கொண்டன.

"ஓவ்! கோமாவிலிருந்து மீண்டிருக்கிறான்! எப்படி? எப்படி?"

ஈஸ்வரின் முகம் அமானுஷ்யமாய் சூரியனித்தது.

"ஈஸ்வர்! ஆர் யூ ஆல்ரைட்?"

மருத்துவர்களை அழைக்கும் அவசர அலாரத்தை அழுத்தினான் டியாரா.

மருத்துவர்கள் கால்களால் பறந்து வர-

அதற்குள் ஈஸ்வர் அழுத்தந்திருத்தமாக, ஆனால் எதற்கோ "ஆஹா!" என வியந்தான். வியந்த மறு மைக்ரோ நொடி ஈஸ்வரின் உயிர் பறந்தது.

ஈஸ்வர் படுக்கையில் பிணமாய்த் தொமீரினான்.

புதிர் நந்தவனம் பூத்துக் குலுங்கியது!

ஈசல் பூமியாக
உலகு உதிரும்
வானம் உதிராது
இல்லாதது உதிர்வதுமில்லை!

- பா. சத்தியமோகன்

## 2

தேஜிஸ்வினி முட்டை மஞ்சள் நிறக் கால் சராயும் க்ளோஸ் நெக் ரோஜா நிற டீசர்ட்டும் அணிந்திருந்தாள். தலைக் கேசத்தை அழுந்தத் தூக்கிச் சீவிக் கொண்டை போட்டிருந்தாள்.

டியாரா க்ரோகோடைல் டீசர்ட்டும் ஸன்னக்ஸ் வகை ஜீன்ஸும் உடுத்தியிருந்தான்.

ஈஸ்வர் மரணத்தின் தாக்கம் இன்னும் டியாராவை விட்டு அகலவில்லை.

பெரிய மருத்துவ அதிசயம் தேஜி.ஈஸ்வர் கோமால விழுந்ததும்-விழுந்தவன் எழுந்து ஆஹான்னு பேரானந்தப் பட்டதும் பின் அதே நொடில மரித்ததும் - இன்னும் டாக்டர்களாலேயே நடந்ததை ஜீரணிக்க முடியல...

"புறப்படு. தேவாவை பாப்பம். போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் எதாவது சொல்லுதான்னு பார்ப்பம்!"

காரில் கிளம்பினர்.

காவல் துறைத் தலைமையகம். தேவா வரவேற்றார். எதிரே அமர்ந்தனர்.

"போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் வந்திருச்சா தேவா?"

"ஓ!"

"எனிதிங் ஸ்ட்ரேஞ்ச்?"

எதிர்மறையாய்த் தலையாட்டினார் தேவா. "ஈஸ்வரின் உடலில் எந்த நோய்க் கிருமித் தாக்குதலும் இல்லை. உணவுப் பாதையில் விஷம் இல்லை. மாரடைப்பு அறிகுறியும் இல்லை. காரணம் அறியப்படாத ஆனால் இயற்கையான மரணம்!"

டியாரா மௌனித்தான்.

"கிளம்புங்க டியாரா. ஒரு மெடிக்கல் டீமும் கம்ப்யூட்டர் எக்ஸ்பர்ட்ஸ் டீமும் ஆராய்ச்சி மையத்துக்குப் போகுது. கூடப் போங்க. அவங்க ஆய்வுகள்ல ஏதாவது தடயம் (இருந்தா) சிக்குதான்னு பாருங்க..."



டியாரா தலையாட்டினான்.

தேவா, "எனக்கென்னமோ ஈஸ்வரின் மரணம் சாதாரண மரணம். கொலையுமல்ல சதியுமல்ல எனத் தோணுது. இருந்தாலும் இதெல்லாம் உங்க திருப்திக்காக டியாரா..."

டியாராவும் தேஜியும் ஆராய்ச்சி மையத்துக்குப் புறப்பட்டனர்.

பாரத் சர்வ மத ஆராய்ச்சி மையம் வெறிச்சோடிக் கிடந்தது.

மையத்தைச் சுற்றி போலீஸ் காவல்.

அனுமன் வால் போல் நான்கு சக்கர வாகனங்கள் அணிவகுத்து மையத்தின் காம்பவுண்டுக்குள் பிரவேசித்தன.

மையம் பொது மக்களிடமிருந்து தனிமைப் படுத்தப்பட்டிருந்தது.

நுண்ணுயிரியல் தலைவர், நரம்பியல் நிபுணர், நச்சு ஆய்வு நிபுணர், ஆய்வுக்கூட தொழில் நுட்பர்கள், உதவி மருத்துவப் பணியாளர்கள், இளம் மருத்துவர்கள், கணினி வைரஸ் ஒழிப்பு நிபுணர், கணினி நோய் தொற்று இயல் நிபுணர் இதரர் இதரர் வந்திருந்தனர். ஸ்பெஸிமன் சோதிக்க நடமாடும் ஆய்வுக் கூடமும் வந்திருந்தது.

தியானேஸ்வரன் அனைவரையும் வரவேற்றார். அவரது முகத்தில் உலக வேதனை ஈஷியிருந்தது.

வந்திருந்த அணிகள் தத்தம் பணிகளைக் கவனிக்க ஆரம்பித்தன. அனைவரும் வைரஸ் தடுப்புக் கவசம் அணிந்து கொண்டனர்.

கணினி நிபுணர்கள் ஈஸ்வரின் கணினியையும் அது சார்ந்த பிளாப்பிகளையும் ஸி.டி. ராம் டிஸ்க்குகளையும் அக்குவேராய் ஆணிவேராய்ப் பிரித்து அலசினர்.

வந்திருந்த மருத்துவ அணி, மையத்தின் காற்றை, நீரை, அறைகளின் உடைமைகளை, சுற்றுப் புறத்தை ஆராய்ந்தது.

டியாரா தியானேஸ்வரனிடம் வந்தான். உங்களிடம் சில கேள்விகள்!

"கேளுங்க!"

"உங்க சொந்த ஊர் எது?"

"நாகர்கோயில்!"

"நீங்க பரம்பரைப் பணக்காரரா?"

"ஆமா!"

"உங்கள் தந்தை என்ன தொழில் செய்தார்?"

"விவசாயம்தான்!"

"நீங்க ஆர்.எஸ்.எஸ். அனுதாபியா?"

"இல்லை."

"விஸ்வ ஹிந்து பரிஷத்?"

"இல்லை...."

"பஜ்ரங் தள்?"

"அய்யய்யோ....இல்லை சார்!"

"எதுவும் இல்லை. சரி. பி.ஜே.பி. யாவது பிடிக்குமா?"

"நான் அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டவன். நான் மதம் சாராத, கடவுள் நம்பிக்கை உடையவன். என்னுடைய கடவுள் அபௌதிகன்!"

"பின்ன ஏன் உங்க ஆராய்ச்சிகளுக்கு ஓஸாமாவின் எதிர்ப்பு?"

"சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் இருக்கும் முஸ்லீம்கள் 130 கோடி. மீதி 400 கோடி மனிதர்கள் சாத்தானின் குழந்தைகள் என்கின்றனர் பழைமை வாதிகள். இவர்களின் ரகசிய துர்போதனைகளை எங்களது ஆராய்ச்சி வெட்ட வெளிச்சமாக்குகிறதே என்கிற கோபம் ஓஸாமாவுக்கு. வெடிகுண்டுகளில் எத்தனை வகை உண்டோ அத்தனையும் எங்க மீது முயற்சித்து விட்டான் ஓஸாமா. இதுவரை தெய்வாதீனமாகத் தப்பித்து வந்திருக்கிறோம். ஒரு முறை ஒரு தனியார் தொலைக்காட்சி நிறுவனத்துக்குப் பேட்டியளித்த ஓஸாமா என்னையும் எனது ஆராய்ச்சிகளையும் அழித்தொழிப்பதாகச் சூளுரைத்திருக்கிறான். பில் கிளிண்டனுக்கு அடுத்த எதிரி நான்தானாம். ஒரு பக்கம் பயமாய் இருந்தாலும் இன்னொரு பக்கம் மகிழ்ச்சியாக இருக்கிறது - ஓஸாமாவின் மதிப்பிற்குரிய எதிரியாக இருக்க!" சிரித்தார் தியா.



தியாவின் மனோதிடத்தை உள்ளுக்குள் சிலாகித்துக் கொண்டான் டியாரா.

"அப்படின்னா ஈஸ்வர் மரணத்துக்கு ஓஸாமாதான் காரணம்னு நம்புறீங்களா?"

"தெரியல, டியாரா. சந்தேகப்பட எந்த ஆதாரமும் இல்லையே? தியா சோகமாய்த் தாடியை நீவி விட்டுக் கொண்டார்."

"இங்கு மொத்தம் எத்தனை கம்ப்யூட்டர் டெர்மினல்கள் உள்ளன?"

"எல்லாத் தளங்களையும் சேர்த்து இருநூறு..."

"இந்த இருநூறு கம்ப்யூட்டர்களையும் உங்கள் கம்ப்யூட்டர் கட்டுப்பாட்டின் கீழ் இணைத்துள்ளீர்களா?"

"ஆமா. கூடுதல் நெட் இணைப்பும் உண்டு."

"டெர்மினல்களை யார் கண்காணிப்பது?"

"டெர்மினல்களை மேனுவலாய்க் கண்காணிக்க சூபர்வைஸர் நியமிச்சிருக்கேன். அதோ அவர்தான் அது!" சுட்டினார் தியா.

ஈஸ்வரின் இருக்கைக்கு வழி காட்டிய அதே ஆசாமிதான்.

"ஈஸ்வர் முந்தின நாள் இரவிலிருந்தே பணிபுரிந்திருக்கிறார். நான் வரும் வரை அவர் கோமாவில் அமர்ந்திருந்தது யாருக்கும் தெரியாது என்பது அபத்தம். குறிப்பா உங்களுக்குத் தெரியாதுன்றது படு அபத்தம்."

"ஆனா அதுதான் உண்மை மிஸ்டர் டியாரா!"

"ஈஸ்வர் கோமால இருந்தது தெரிஞ்ச பிறகு ஈஸ்வரின் கம்ப்யூட்டரில் எந்த பிளாப்பி இருந்ததுன்னு கவனிச்சீங்களா?"

"இன்புட்டில் இருந்தது பிளாப்பி அல்ல. ஒரு ஸிடிராம். ஆனா அதன் உள்ளடக்கம் முழுசும் அழிஞ்சிருந்தது டியாரா!"

"ஏன்? எப்படி?"

"ஈஸ்வர் கோமாவுக்குப் பாய்வதற்கு முன் தற்செயலாக ஈஸ்வரே அந்த ஸிடிராம் உள்ளடக்கத்தை அழிச்சிருக்கலாம்!"

"எதற்காக?"

"தெரியலையே!"

"வேறு யாராவது செஞ்சிருக்கலாமில்லையா?"

"சாத்தியமில்லை!"

"ஈஸ்வர் கம்ப்யூட்டரின்
LOGIN ID என்ன? PASSWORD என்ன?"

"லாகின் ஐ.டி. ஜீபூம்பா!"

"பாஸ்வேர்டு!"

"மியாவ்!"

"லாகின் ஐ.டி.யும் பாஸ் வேர்டும் உங்களுக்குத் தெரிஞ்சிருக்கு. ஸி.டி. ராம் உள்ளடக்கத்தை நீங்க ஏன் அழிச்சிருக்கக் கூடாது?"

பதறினார் கண்காணிப்பாளர்.

"கடவுளே! என் மேல வீணா பழி சுமத்தாதீங்க சார்!"

"என் சந்தேக லிஸ்ட்டில் முதலாவதாக இடம் பிடிச்சிருக்கீங்க. தேவைப்பட்டா மீண்டும் விசாரிப்பேன். இப்ப நீங்க போலாம்!"

கண்காணிப்பளார் தயக்கமாய் விலகினார்.

டியாரா சப்தமாய் அறிவித்தான். "இறந்து போன ஈஸ்வருக்கு நெருங்கிய தோழன் அல்லது தோழி இங்கு யார்?"

சில நிமிடங்கள் தயக்க மயக்கத்துக்குப் பிறகு ஓர் இளைஞன் முன் வந்தான். ஈஸ்வருக்குச் சம வயதினன்.

"உங்களது பெயர்?" வினவினான் டியாரா.

சொன்னான்

"சொந்த ஊர்?"

"மதுரைக்குப் பக்கத்ல திருமங்கலம்!"

"என்ன படிச்சிருக்கீங்க?"

"அண்ணாமலை யூனிவர்சிடில பி.ஈ.கம்ப்யூட்டர் இன்ஜினீயரிங்!"

"இங்க வேலைக்குச் சேர்ந்து எத்தனை நாளாகுது?"

"நாலு வருஷமா இருக்கேன்!"

"பணி திருப்தி இருக்குதா?"



"நிச்சயமா சார்!"

"தீவிரவாத அச்சுறுத்தல் உங்களுக்குப் பயமுட்டவில்லையா?"

"பயந்தா பணிக்குப் போகாம வீட்லேயே முடங்கிக் கிடக்க வேண்டியதுதான். மனசைத் தைரியப்படுத்தி வச்சிருக்கேன்!"

"மையத் தலைவர் தியாவின் கேரக்டர் எப்படி?"

"சொக்கத்தங்கம்!"

"அவரது ஆராய்ச்சில ஏதாவது HIDDEN AGENDA உண்டா?"

"கிடையவே கிடையாது!"

"ஈஸ்வர் கேரக்டர் எப்படி?"

"வெரி நைஸ் கைய்!"

"இந்த மையத்ல அவருக்கு எதிரிகள் உண்டா?"

"நோ சான்ஸ்!"

"சமீபத்ல யாரையாவது காதலிச்சாரா?"

"எனக்குத் தெரிஞ்சு இல்ல சார்!"

"ஈஸ்வரைப் பற்றி வேற ஏதாவது?"

"கடவுள் பக்தி மிக்கவர். ஆஞ்சநேயர் பக்தர். வொர்க்ககாலிக். எந்த விஷயத்தையும் தீர அலசி ஆராய்ஞ்சுதான் ஒத்துக்குவார்! ஒண்ணும் ஒண்ணும் இரண்டுன்னு சொல்றதுக்கு கூட லாஜிக் கேட்பார். ஈஸ்வருக்கு நாங்க வச்சிருந்த பட்டப்பேர் என்ன தெரியுமா சார்? மிஸ்டர் லாஜிக்! கம்ப்யூட்டர் முன்னாடி அவர் விடிய விடிய உக்கார்ந்து வேலை பாக்கறது அடிக்கடி நடக்கற விஷயம். அதனாலதான் நாங்க அவர் கோமால உக்காந்திருந்தத சந்தேகப்படல..."

தலையாட்டி கேட்டார் டியாரா.

"வேலைக்கு சேர்ந்ததிலிருந்து இன்ன வரைக்கும் உங்களுக்கோ உங்களது சகாக்களுக்கோ ஏதாவது விசித்திரமான நோய் அறிகுறிகள் வந்திருக்கா?"

யோசித்து மறுத்தான் ஈஸ்வரின் சகா "இல்ல சார்!"

"குறிப்பா ஈஸ்வருக்கு?"

"இல்ல சார்!"

"இந்த தளத்திலுள்ள கம்ப்யூட்டர் டெர்மினல்களில் ராசி இல்லாதது எது?"

சிரித்தான் சகா.

"அப்படியெல்லாம் எதுவும் இல்லை சார்!"

கடைசி கேள்வி. ஈஸ்வரின் மரணம் இயற்கையா, சதிச் செயலா?

ஆழமாக யோசித்தான் சகா.

"மன்னிச்சிருங்க சார். தெரியல...."

"ஓகே...ஓகே..." என்றான் டியாரா ஏமாற்றமாய். இன்னும் சிலரிடம் விசாரணைகள் தொடர்ந்தான். பயன் இல்லை.

மருத்துவக் குழுமம் கணினி நிபுணர் குழுமமும் உதடு பிதுக்கின.

பெருத்த ஏமாற்றம்.

அனைவரும் புறப்படத் தயாராயினர்.

தியா "உங்க விசாரணைகளும் ஆய்வுகளும் முடிஞ்சிருச்சுதானே?"

"யெஸ்?"

"மீண்டும் இந்த மையம் தனது பணிகளைத் தொடங்கலாமில்ல?"

"நிச்சயமா!"

"ஈஸ்வர் இருக்கைக்கு வேறோருவரை நியமிக்கலாமில்லையா?"

"ஓ.எஸ்!"

தியா தனது நூற்றுக் கணக்கான பணியார்களிடம் திரும்பினார். "ஈஸ்வரின் ஆன்மா சாந்தியடைய இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்துவோம்!"

இரு நிமிடங்களுக்குப் பின்

தியா, "ஈஸ்வர் இருக்கைக்கு யார் வர விருப்பம்?"

அனைவரும் பயந்து நின்றனர். நிமிடங்கள் கரைந்தன.

"புதிதாக யாரையாவது அப்பாய்ன்ட் பண்ணிக்கிறேன்!"

"தேவையில்லை சார். நான் தயார்!" முன் வந்தாள் வினிதா.



பலி ஆட்டைப் பார்ப்பது போல அனைவரும் வினிதாவை வெறித்தனர்.

மருத்துவர் குழுமமும் கணினி நிபுணர் குழுமமும் தேவாவுடன் அகன்றனர். டியாராவும் தேஜியும் தியாவுடன் நடந்தனர்.

குளிர்பதன மூட்டப்பட்ட அறை.

சுவர்களில் ஒளியும் வர்ணமும் நெசவிய கடவுள் ஓவியங்கள்.

அமர்ந்தனர்.

தியானேஸ்வரன் தனது கம்ப்யூட்டரை உயிர்ப்பித்தார். தனக்கு ஏதாவது மின்னஞ்சல் வந்துள்ளதா எனப் பார்த்தார்.

வந்திருந்தது.

மின்னஞ்சல் சொன்ன தகவல்.

<u>ஈஸ்வரின் மரணம் இறைவனுக்கு உவப்பானது. பாரத் சர்வ மத ஆராய்ச்சி மையத்தில் மரணங்கள் தொடரும். இன்ஷா அல்லாஹ்.</u>

ஓஸாமா

தியா திகிலுற்றார்.

இரத்த வெறி பிடித்த ஓஸாமா கெக்கலிப்பாய்ச் சிரித்தான்.

விஞ்ஞான அறிவு சார்ந்த ஒரு யுத்தத்துக்கு ஆயத்தமானான் டியாரா!

## 3

மர்மம் புரிய
கானகருமங்கும்
ஒரே ஒரு விதையைக் கவனி

- பா. சத்தியமோகன்.

தியா நடுங்கம் குரலில் வினவினார்...

"அப்படியென்றால் ஈஸ்வரின் மரணம் இயற்கையானது இல்லையா? ஓஸாமாவின் விஞ்ஞானச் சதிதானா?"

டியாரா தனது நெற்றிப் பொட்டைத் தட்டிக் கொண்டான்.

"உங்களுக்கு ஈமெயில் அனுப்பியது ஒரிஜினல் ஓஸாமா

தானான்னு யாருக்குத் தெரியும்? ஈமெயில் வலை தளத்தில் அஞ்சு கோடி உபயோகிப்பாளர்கள் உள்ளனர். ஈஸ்வர் மரணத்தை வச்சு யாராவது நம்மைக் குழப்ப முயல்கிறார் களோ என்னவோ?"

ஆமோதித்தார் தியா.

அறைக் கதவு நளினமாகத் தட்டப்பட்டது.

"யெஸ்!" என்றார் தியா.

ஆண் புயலாய் தியானேஸ்வரனின் 14 வயது மகன் புகழ் என்கிற புகழேந்தி அறைக்குள் பிரவேசித்தான். ஆர்க்கிடெக்சர் படிப்பவன்.

மகனை டியாராவுக்கும் தேஜிக்கும் அறிமுகப்படுத்தி வைத்தார் தியா. புகழின் பார்வை தேஜியின் மீதே நிலைத்தது.

மெதுவாக விசிலடித்தான். "யாரிந்த தேவதை?"

டிடெக்டிவ் டியாரா ராஜ்குமாரின் உதவியாளி தேஜி!

"வாவ்! எதாவது அசம்பாவிதம் எங்க மையதிதல நடந்தாத்தான் திக் விஜயம் செய்வீங்களா தேஜி?"

"சிரித்தாள் தேஜி, டியாராவை ஓரக்கண்ணால் பார்த்த . படி. டியாராவுக்குள் பொறாமைப் பிரளயம்."

தியா, "பய கொஞ்சம் ஜாலி டைப். தப்பா நினைச்சுக்காதீங்க டியாரா!"

"டியாரா! தேஜி உங்க ஒய்ப்பா?"

"இல்லை!"

"உங்க காதலியா?"

பலவீனமாக-"இல்லை!"

"ஒரு தலைக் காதலாவது?"

"சேச்சே!"

"தாங்க்யூ... தேஜி!" என்னை உங்க நண்பனாக அங்கீகரிப் பீங்களா.

"ஒய் நாட்?"

தேஜியும் புகழும் கை குலுக்கிக் கொண்டனர்.

தியாவின் முகம் குறுகியது. "புகழ்! நம்ம மையம் பெரும் ஆபத்தில சிக்கிக்கிட்டு இருக்கு. ஈஸ்வரின் மரணம் ஒரு சதி செயல் என்பதை ஒப்புக் கொண்டு ஓஸாமா நமக்கு ஈமெயில்



அனுப்பிச்சிருக்கான். டிடெக்டிவ்ஸ் நம்ம மைய நலனுக்காக வந்திருக்காங்க. அவங்க உன்னை விட வயசிலயும் அனுபவத் திலயும் மூத்தவங்க. மரியாதையுடன் நடந்துக்க!"

"ஸாரி டாடி. ஸாரி டியாரா, தேஜி!"

தேஜி புகழின் தோளைத் தட்டிக் கொடுத்தாள். "என்ன சார் நீங்க... பையனைப் பேசிக் கடிஞ்சிக்கிட்டு டீனேஜ் பாய்ஸ் இப்படித்தான் இருப்பாங்க. அவங்களை அவங்களா கவே இருக்க விடுங்க!"

"ஓகே!" சமாதானமானார் தியா. "என்ன விஷயமா வந்த புகழ்?"

"ஈஸ்வரின் ஈமக்கிரியை இன்னும் ஒரு மணி நேரத்ல. உங்களைக் கூட்டிட்டுப் போக வந்தேன்!"

மையத்தில் பணிபுரிவோர் அனைவருக்கும் இத்தகவலைத் தெரிவித்தவர், "விருப்பப்பட்டவங்க தகனத்தில போய்க் கலந்துக்கலாம். அவர்களுக்கு என் விசேஷ அனுமதி உண்டு!"

புகழ் "டாடி! நீங்க உங்க கார்ல வாங்க. நான் டிடெக்டிவ்ஸுடன் வரேன் பேசிக்கிட்டே!"

அரை மனதாய்த் தலையாட்டினார் தியா.

டியாரா தேஜியின் காரிலே அமர்ந்து கொண்டான் புகழ்.

"எனக்குச் சுத்தமாகவே பிடிக்கலைங்க!"

"எது?"

"எங்கப்பா செய்றது. இந்த சர்வ மதம் கிர்வ மதமெல்லாம் பேசத்தான் நல்லா இருக்கும். நடைமுறைக்கு ஒத்து வருமா? அவங்கவங்க எந்தந்த மதத்ல பிறந்தோமோ அந்தந்த மதத்தில இருந்து சாகவேண்டியதான். இவர் சொல்றது இந்தியால எவன் கேப்பான்? வெட்டி வேலை. எங்க தாத்தன் சொத்தை அர்த்தமில்லாம செலவு பண்றார். கூடுதலா தீவிரவாதிகள் பகை வேற தேவையா? பாத்துக் கிட்டே இருங்க. நானும் எங்கப்பனும் கூடிய சீக்கிரம் பீஸ் பீஸா சிதறிக் கிடக்கப் போறோம். அதுக்குள்ள எந்தப் பொண்ணையாவது லவ் பண்ணி பாத்திரலாம்னு பாத்தா

அதுவும் நடக்க மாட்டேங்குது. நம்பளவிட வயசில மூத்த பொண்ணை லவ் பண்றது தப்பாங்க?"

"இல்லை" என்றாள் தேஜி

"அப்படின்னா உங்களை லவ் பண்ண வேண்டியதுதான்!"

"புகழ்! நாம போறது ஈஸ்வர் தகனத்துக்கு. கொஞ்ச நேரம் சோகமா முகத்தை வச்சுக்க. நொடிக்கு நூறு வார்த்தை பேசாதே."

"நீங்க எது சொன்னாலும் கேட்பேன்!"

இடுகாடு வந்தது. ஏற்கெனவே ஒரு கூட்டம் அங்கு காத்திருந்தது. ஈஸ்வரின் சிதை எரியூட்டப் பெற்றது.

மீண்டும் காருக்குத் திரும்பினர். கார் கிளம்பியது.

தேஜி புகழுடன் பின் இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.

"உன் அம்மா வீட்ல இருக்காங்களா?"

"இறந்துட்டாங்க தேஜி. அப்பா ஆராய்ச்சி மையத்தைக் கட்டிக்கிட்டு அலையறார். நான் தன்னந்தனியா வீட்ல... போர் போர்!"

தனது விசிட்டிங் கார்டை நீட்டினாள் தேஜி. "எப்ப வேணாலும் போன் பண்ணு!"

"இவர் தப்பா நினைச்சிக்க மாட்டாரா?"

"டியாராவா? அவர் என் பாஸ். அவ்வளவுதான். எனது பாய் பிரண்ட்ஸை நான் எப்ப வேணாலும் சந்திப்பேன். எது வேணாலும் பேசுவேன். ஏதாவது எக்குத்தப்பா கேட்டார்னா போய்யா நீயும் உன் வேலையும்னு சொல்லிட்டு வந்திடுவேன். மூழ்காத ஷிப் ப்ரண்ட்ஷிப்தானே?"

"சந்தோஷமா இருக்கு!"

காரைச் சருட்டென்று நிறுத்தித் திரும்பினான் டியாரா. ரொம்ப சந்தோஷமா இருந்தா இறங்கி நடு ரோட்ல ஆடுங்க!

"நேரா-ஐஸ்கிரீம் விடப்பட்டுள்ளது கப்களை வீசினர்."

"தேஜி பில் நான்தான் பே பண்ணுவேன்!"

"சரி!"

மீதித் தொகையை டிப்ஸாக அறிவித்தான். மீண்டும் காரில் ஏறிக் கொண்டனர். தனது விசிட்டிங் கார்டை நீட்டினான் புகழ்.



"எப்ப வேணாலும் போன் பண்ணுங்க. ஐ வில் வெயிட் பார் யுவர் கால்!"

"எங்க இறங்கற புகழ்?"

"அதோ அந்த ஸ்நோ பௌலிங் சென்டர்ல இறங்கிக்கிறேன்!"

கார் நின்றது. இறங்கினான் புகழ்.

தாங்க்யூ தேஜி. மீண்டும் சந்திப்போம்!

"பை!" பறக்கும் முத்தம் அனுப்பினாள் தேஜி.

மயங்கி கிறங்கி தவழ்ந்து உருண்டு போனான் புகழ்.

"இன்னைக்கு நைட் அவன் தூங்க மாட்டான். மகா ஜொள்ளன். படு பயங்கரமா உசுப்பி வேற விட்டுட்ட நீ செய்றது சரிதானா?"

தேஜி புன்னகைத்தாள்.

"இது ஒரு Cock-tearing play கண்டுக்காத, உள்ளுக்குள்ள ஆயிரம் அர்த்தம் இருக்கும்!"

கார் தயங்கி பறந்தது.

வெள்ளை நிற ஃபுல்சூட் உடுத்தியிருந்தான் டியாரா. கறுப்பு ஜீன்ஸும் கறுப்பு டீ சர்ட்டும் அணிந்திருந்தாள் தேஜி.

"புகழ் அடிக்கடி உனக்கு ஃபோன் பண்றான் போல..."

"எப்படித் தெரியும் உனக்கு? கடந்த 24 மணி நேரத்தில முப்பது தடவை பண்ணியிருக்கான். பேசுறான் பேசுறான். பேசிக்கிட்டே இருக்கான்."

"புறப்படு. உனது ஃபோன்களுடன் பதிலளிக்கும் இயந்திரத்தை இணைச்சிட்டு வா. அவன் பேசுறது பதிவாயிருக்கும். வந்தவுடனே போட்டு காது குளிரக் கேக்கலாம்!"

செய்தாள். புறப்பட்டனர்.

ஈஸ்வரின் வீடு போரூரில் இருந்தது. சொந்த வீடு. பெற்றோர் அழுதபடி மூலையில் அமர்ந்திருந்தனர்.

"வணக்கம்." கை குவித்தான் டியாரா.

"வணக்கம், நீங்க?"

"வி ஆர் ப்ரைவேட் டிடெக்டிவ்ஸ். உங்க கிட்டக் கொஞ்சம் பேசணும்!"

"கேளுங்க!"

"கடந்த ஒரு மாசத்ல ஈஸ்வர் எதாவது மனம் திறந்து பேசினாரா? ஏதாவது நடத்தைல மாறுதல் இருந்ததா? உடல் நிலைல எதாவது பின்னடைவு தெரிஞ்சதா?"

"எதுவும் இல்ல..."

"உங்க மகன் ஏதோ விஞ்ஞானச் சதி செய்யப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். அது எப்படின்னு முழு மூச்சா டிடெக்ஷன்ல இறங்கி இருக்கோம். இதனால இழந்த உங்க மகனை மீட்டுத் தர முடியாது. ஆனா குற்றவாளிக்குத் தண்டனை பெற்றுத் தரலாம். தயவு செஞ்சு எங்களோட ஒத்துழைங்க!"

"சரி!"

"உங்க மகன் ஈஸ்வர் அறையை நாங்க பார்வையிடணுமே?"

"தாராளமா!"

ஈஸ்வரின் அம்மா சாவிக் கொத்தை நீட்டினாள். திறந்தான் டியாரா. ஜன்னல்களைத் திறந்து விட்டு அறையின் வெளிச்சத்தைக் கூட்டினாள் தேஜி.

அறை முழுக்கப் புத்தகங்கள், புத்தகங்கள்.

புத்தகங்களுக்கு இடையேதான் தூங்கியிருக்கிறான் ஈஸ்வர்.

ஓஷோ ரஜனிஷ், ஜே.கே. ஸைக்கோ டார்வினிஸம், ஜென்கதைகள், குர் ஆன் ஆங்கிலப் பதிப்பு, மஹாபாரதம் தமிழ்ப் பதிப்பு நான்கு பாகங்கள், பகவத் கீதை ஆங்கிலப் பதிப்பு. தமிழ் கிராமிய விடுகதைப் பாடல்கள், சுஜாதாவின் நாவல்கள், சாண்டில்யன், சுந்தர ராமசாமி, வண்ண நிலவன், பாலகுமாரன், கண்ணதாசன்.

ஒரு காலி சாக்லேட் டப்பாவில் நூற்றுக்கணக்கான ஆங்கிலப் பத்திரிகை குறுக்கெழுத்துப் போட்டி கட்டிங்குகள்.

எல்லா கட்டங்களையும் பென்சிலால் பூர்த்தி செய்திருந்தான் ஈஸ்வர்.

தமிழ் கிராமிய விடுகதைப் பாடல்களைப் புரட்டினாள் தேஜி.



**சின்னப் பையனும் சின்னப் பொண்ணும்**
**சேர்ந்து கட்டின தாலி!**
**அதைச் சிக்கு இல்லாம அவிழ்க்கிறவங்களுக்கு**
**சென்னைப் பட்டினம் பாதி!**

அது என்ன?

விடை: குருவிக் கூடு

மேஜை இழுப்பறையை இழுத்தான் டியாரா. ஈஸ்வரின், அந்தரங்க டைரி இருந்தது. எடுத்துப் பிரித்தான். அதில்-

**நீ நீனைக்கிற நீ உன்னிடம் இல்லை.**
**நான் நினைக்கிற நான் என்னிடம் இல்லை.**
**பின்னே...**
**நிஜத்தில் நீ யார்? நான் யார்?**

டியாராவும் தேஜியும் ஒருவரையொருவர் திகைப்பாய்ப் பார்த்துக் கொண்டனர்.

"இந்த ஈஸ்வர் யாகவா முனிவர் போல குழப்பமான ஆள் தேஜி!"

சிரித்தபடி ஈஸ்வரின் சில உடைமைகளை எடுத்துக் கொண்டான் டியாரா.

ஈஸ்வரின் பெற்றோருக்கு நன்றி கூறிவிட்டு காருக்கு நடந்தனர்.

டியாராவின் செல்ஃபோன் சிணுங்கியது.

ஃபோன் செய்தி காதுகளில் பூகம்பம் செய்தது.

வானத்துக்குத் துள்ளினான் டியாரா.

"என்ன டியாரா?"

"ஈஸ்வரின் இருக்கைல பணி அமர்ந்த விவிதாவும் கோமா நிலையில. கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் எடுத்துச் சென்றிருக்கிறார்களாம்!"

"அன்பிலீவபிள்!"

இருவரும் மருத்துவமனைக்குப் பறந்தனர்.

இன்டென்ஸிவ் கேர் யூனிட்டில் விவிதா வெண்டிலேட்டருடன்.

மெதுவாக நழுவி டியாரா விவிதாவின் படுக்கைக்குப் போனான். நிலவு போல் முகம்.

அருகில் குனிந்தான்.

மந்திரம் கிசுகிசுக்கும் குரலில் வினவினான். உனக்கென்னாச்சு வினிதா?

நொடிகள் கரைந்தன.

அசைந்தாள். முகம் சூரியனித்தது. கண்களைத் திறந்தாள்.

மெதுவாகத் தலையைத் தூக்கினாள்.

கண்கள் ஏமாற்றத்தில் நிலைத்து அழுத்தந்திருத்தமாக ஒற்றை வார்த்தையை உச்சரித்தாள் விவிதா. "ஆஹா!"

மறு மைக்ரோ நொடி மரித்தாள்.

மல்லாக்கத் தொமீரினாள் விவிதா.

டியாரா நெற்றியில் அறைந்து கொண்டு திகிலுற்றான்.

## 4

**உலகம் புரள்கிறது**
**யுத்தக் குரலில்**
**பரிதவிக்கின்றன குயில்கள்**
**குரலில் சயனைடோடு**

**- பா. சத்தியமோகன்**

மருத்துவர் குழுமம் ஓடி வந்தது. பரிசோதித்துவிட்டு விவிதாவின் மரணத்தை உறுதி செய்தது. ஆனால் விவிதா கோமாவிலிருந்து எழுந்து ஆஹா எனக் கூறி மரித்ததற்கான காரணத்தை அவர்களால் விளக்க இயலவில்லை.

Completely Out of logic என்றார்கள்.

டியாரா விவிதாவின் பிரேதத்தை நுண்ணிமையாய் ஆராய்ந்தான்.

விவிதாவின் முகம் பேரானந்தத்தில் உறைந்திருந்தது.

எதனைக் கண்டு பேரானந்தம்?

மரணம்?

ஈஸ்வரும் வினிதாவும் மரணத்தை விரும்பி ஏற்றுக் கொண்டார்களா?

அப்படியென்றால் இவர்களது மரணம் - ஓஸாமாவின் விஞ்ஞானச் சதி இல்லையென்றாகிறதே?

தலைமை மருத்துவர் டியாராவிடம் நடந்து வந்தார். "மிஸ்டர் டியாரா! பாடியை போஸ்ட் மார்ட்டம் பண்றதுக்கு முன்னாடியே சொல்றேன். இதுவும் காரணம் கண்டுபிடிக்க முடியாத, ஆனால் இயற்கையான மரணம்!"



டியாரா எதிர்மறையாய்த் தலையாட்டினான். "எந்த அவசர முடிவுக்கும் உடனே வந்து விடாதீங்க டாக்டர். குறுகிய இடைவெளிக்குள் ஒரே பணியிடத்தில் இருவர் மரணம்."

"மருத்துவக் காரணம் அறியப்படாவிட்டாலும் நடந்தவை இயற்கையான மரணங்களல்ல என நான் உறுதியாக் நம்புகிறேன் டாக்டர்!"

மௌனித்தார் தலைமை மருத்துவர்.

"டாக்டர்! கம்ப்யூட்டர்ல பணி புரியறவங்களுக்கு வேறென்னென்ன மர்ம நோய்கள் தாக்கக் கூடும்?"

"லெஜினெய்யர் நோய் (Legion Naires Disease) என்ற நோய் தாக்கக் கூடும். இந்த நோய் ஒரு ஒரு வகை பாக்டீரியாக்களால் பரவும் நிமோனியா. விவிதாவின் கல்லீரல் சிறுநீரகங்களை ஆராய்ந்தால் அந்த நோய்த் தொற்று உள்ளதான்னு சொல்லிடலாம். பி.எம். வரைக்கும் காத்திருங்க."

"வேற?"

தலைமை மருத்துவர் வெகு நேரம் யோசித்து நிமிர்ந்தார். "பீடிக்கப்பட்ட அறிகுறிகள் காட்டாம மெது மெதுவா தூக்கத்தில் ஆழ்த்தி திடீர்னு ஒரு நாள் மரணத்தைப் பரிசளிக்கும் தொற்றுநோய் ஒன்றிருக்கு. காற்று வழி பரவும் நோய். ஆனா அந்த நோய் தாக்கித்தான் ஈஸ்வரும் வினிதாவும் இறந்திருப்பாங்கன்னு நான் நம்பல!"

"எப்படி?"

"அந்த நோய்ல தடாலடி கோமாவும் ஆகாதாம். அதன் பின் உடனடி மரணமும் கிடையாது."

டியாரா நெற்றி சுருக்கினான்.

"இப்படி ஒரு கோணம் பாருங்க...."

"சொல்லுங்க..."

"பாரத் ஆராய்ச்சி மையத்தை அழிக்கத் தொடர்ந்து பல முறை முயற்சித்து இருக்கிறான் ஓஸாமா. எலக்ட்ரானிக்

ப்யூஸ்டு பாம், மனித வெடிகுண்டு, கிளேமோர் பாம் இப்படி, இப்போது தனது தாக்குதல் யுக்தியை ஒஸாமா மாற்றிக் கொண்டிருக்கக் கூடும். ஒரு புத்தம் புது உயிர்க்கொல்லி வைரஸை உருவாக்கி மையத்ல விதைச்சு உயிர்களை அறுவடை செய்கிறானோ ஒஸாமா?"

"இருக்கலாம். யார் கண்டது? பெயரிடப்படாத, ஆயிரம் புது வகை வைரஸ்கள் உள்ளன. அவைகளில் ஒன்று விதைக்கப்பட்டிருந்தா அதை உறுதி செய்யும் அதிநவீனத் தொழில் நுட்பம் இந்த மருத்துவமனைல இல்லை!"

உடையாடலை முடித்துக் கொண்டு கிளம்பினான் டியாரா.

"நன்றி டாக்டர். மீண்டும் சந்திப்போம்!"

மருத்துவ மனையை விட்டு டியாராவும் தேஜியும் வெளியே வந்தனர். டியாரா காரைக் கிளப்பினான்.

மல்ட்டி மீடியா கம்ப்யூட்டரின் முன் அமர்ந்திருந்தான். டியாரா. மானிட்டர் வெளிச்சம் அவனது முகத்தில் க்ளைடாஸ்கோப்பியது. ஹார்லிக்ஸை உறிஞ்சியபடி மாயவெளி சமூகத்தில் உலவினான்.

தேஜி வந்து சேர்ந்தாள்.

நெட் ஃபோனில் கனடா நண்பருடன் கதைத்தாள்.

"வணக்கம்!"

"வணக்கம்!"

"என்னுடைய விஞ்ஞானச் சிறுகதைகளை மொழி பெயர்க்கும் பணி முடிந்துவிட்டதா?"

"ஏறக்குறைய, பதிப்பகத்தொடும் தொடர்பு கொண்டுள் ளேன். மேலும் சில பல வாரங்கள் பொறு...."

"நன்றி ப்ரபஸர். உங்கள் குடும்பத்தார் நலமா?"

"நலம். உன் குடும்பத்தார்?"

"நலம் (ஈஸ்வர், வினிதா மரணங்களை விளக்கி) கொலை (?) க்கான சாத்தியங்களை நெட் சமூகத்தில் விவாதித்து அனுப்புங்கள்."

"செய்கிறேன்!"

"நன்றி!"



நெட் ஃபோன் தொடர்பு அறுந்தது.

தேஜியிடம் அண்ணாந்தான், "யப்பா!"

"என்ன வாயைத் திறக்கற?"

"பழைய கர்ணன் பட கேமிரா ஆங்கிள்ல ஹீரோயினைத் தரிசிச்ச மாதிரி இருந்துச்சு!"

"முறைத்தபடி பக்கவாட்டுக்கு நகர்ந்தாள் தேஜி"

"போன காரியம் என்னாச்சு தேஜி?"

"முடிச்சிட்டேன்!"

"சொல்லு...."

"புகழைப் பார்க்க அவன் வீட்டுக்குப் போனேன். அவன் கிட்டே பேசினபடியே தியானேஸ்வரனின் முன்கதைச் சுருக்கத்தைச் சேகரிச்சேன். சந்தேகப்படும்படி எதுவும் இல்லை. ஆனா புகழின் அன்புத் தொல்லைதான். - தாங்க முடியல!"

"அவனைப் பத்திப் பேசாதே!"

"தவிர ஈஸ்வர், விவிதாவின் தோழர் தோழிகளை விரிவா பேட்டி கண்டிருக்கேன். மைக்ரோ ரிக்கார்டர்ல பதிவு பண்ணியிருக்கேன். நேரம் கிடைக்கும் போது போட்டுக் கேளு டியாரா!"

வாங்கி வைத்துக் கொண்டான் டியாரா.

இறந்து போன விவிதாவின் வீட்டுக்குப் போனியா?

"போனேன். அவ பெற்றோர் அவ இறந்த அதிர்ச்சி யிலிருந்து கொஞ்சமும் மீளல.... விவிதாவுக்கு மூன்று தங்கச்சிகள். ஒட்டு மொத்தக் குடும்பமும் விவிதாவின் சம்பாத்தியத்தைச் சார்ந்தே இருந்திருக்கிறது. விவிதாவின் தாயார் என்னைக் கட்டிக் கொண்டு கதறி அழுதார்கள்!"

"நீயும் அழுதாயாக்கும்?"

"ன்ன?"

"கம் டு தி பாயின்ட் தேஜி. விவிதாவின் உடைமைகளை ஆராய்ந்தாயா?"

"யெஸ்!"

"என்ன கிடைச்சது?"

"ஒரு டஜன் பிரேஸியர்களும் பூப்போட்ட காட்டன் பேன்ட்டிகளும்!"

"பீ சீரியஸ்!"

"விவிதாவுக்குக் கடவுள் நம்பிக்கை மிக மிக அதிகம். குறிப்பா சொல்லப் போனா அவ தில்லைக் காளியின் பக்தை!"

"ஈஸ்வர் ஆஞ்சநேயர் பக்தன். இவ காளி உபாசகி. சபாஷ். அப்பறம்?"

இவளும் பல தமிழ் வார மாத இதழ்களில் வரும் குறுக்கெழுத்துப் போட்டி கட்டிங்குகளைச் சேகரித்து வைத்திருந்தாள். விகடன் பேப்பரின் கிறுக்கெழுத்துப் போட்டி கட்டிங்குகள் கூட,,,

டியாரா சுவாரசியமானான்.

"அவ சேகரிச்சு வைச்சிருக்கிற கிறுக்கெழுத்துப் போட்டில உள்ள ஒரு கேள்வி. ஜோக் எழுதி சிறை வைத்த எழுத்தாளரின் ஊர் இங்கு படுத்துக் கொண்டிருக்கிறது! அந்த ஊர் பெயரென்ன டியாரா?"

"படுதலம்" (சுகுமாரன்)

"சபாஷ்!"

"விவிதாவுக்கும் டைரி எழுதும் பழக்கம் இருந்திருக்குமே?"

"இல்லை. ஆனா அவ தனது படுக்கையறைச் சுவரில் ஒரு வாசகம் கிறுக்கியிருந்தா. அதை ஃபோட்டோ எடுத்துட்டு வந்திருக்கேன்!"

"அந்த வாசகத்தை உன் வாயாலேயே சொல்லேன்!"

மந்திரம் போல் கூறினாள்.

"நீரில் மீன் சந்தோஷமாய் நீந்துகிறது என்று நீ அறிவாயா? நீருக்கு வெளியே நீ சந்தோஷமாய் உலவுகிறாய் என்று மீன் அறியுமா?"

முகவாயைத் தேய்த்துக் கொண்டு சிரித்தான் டியாரா.

"இது என்னன்னு தெரியுதா தேஜி?"

"இல்ல!"

"இது ஜென் கதை ஒன்றின் சுருக்க வடிவம்!"



"ஜென் என்றால் என்ன டியாரா?"

"ஜென் என்பது ஜப்பானிய வடிவயுத்தக் கொள்கை. ஜென் வேதங்களை விட தியானம் பெரிது என்கிறது. ஜென் கதைகள் பொதுவாகக் குழப்பமானவை. ஆனா கவர்ச்சியானவை தேஜி!"

"வாவ்! காளி பக்தை ஜென் படிச்சிருக்காளா?"

"வேறென்ன வினிதா அறைல கிடைச்சது?"

"ஓர் ஆடியோ கேசட்டை நீட்டினாள் தேஜி. இது அவளது டூ இன் ஒன்ல கிடைச்சது. தன் மனசில தோணினதை இதுல் பேசிப் பதிவு செஞ்சிருக்கா விவிதா!"

அதனைப் பெற்று பிளேயரில் திணித்து உயிர்ப்பித்தான்.

மீராவின் பக்திப் பாடல்களை அழித்து அதன் மேல் பேசியிருந்தாள் விவிதா. கிட்டத்தட்ட மதப் பிரசங்க தோரணை.

விவிதா பேச ஆரம்பித்தாள்.

*மாயை என்று சொல்கிறார்களே, அது என்ன? இறைவன் உலகங்களையும் உயிர்களையும் உருவாக்க ஒரு மூலப் பொருளை வைத்திருக்கிறான். அதுதான் மாயை. மாயையும் ஒரு பொருளே. அணுக்களுக்கும் அணு கருத்துகள்களுக்கும் சூட்சமமான பொருள் இதுவே. மாயை என்றும் இருப்பது போலவே தோன்றினாலும் அது நிலையற்றதே. எப்படி ஆறு இருந்த இடத்தில் இருந்தாலும் அதன் நீர் மாறிக் கொண்டே இருக்கிறது அல்லவா? அது போல், மாயையில் மைக்ரோ சதவீதம்தான் உயிர்களும் பிரபஞ்சங்களும். மீதி 99.9999 சதவீதம் நம் ஊனக்கண்களால் காண முடியாத இருட்பொருளாக உள்ளது!*

ஆடியோவைப் பட்டென்று ஆஃப் செய்தான் டியாரா.

"கடவுளே! கடவுளே! இந்த வினிதா படுபயங்கர பக்திப் பழம்போல. இவ கூற்றின் படி நீயும் மாயை; நானும் மாயை!"

சிரித்தான்.

"டியாரா! ஈஸ்வர் விவிதா மரணங்கள் குறிச்சு ஒரு திரில் வச்சிருக்கேன். எடுத்து விடவா?"

"ஓ!"

"இந்த இருவரின் மரணங்களுக்கு பின்புலமாக இருவரின் கடவுள் பக்தியும் குறுக்கெழுத்துப் போட்டி பொழுதுப் போக்கும் இருக்கும் என நம்புகிறேன்!"

"சுஷ்மிதா ஸென் புட்டத்துக்கும் மந்த்ரா மார்புக்கும் முடிச்சுப் போடாதே தேஜி!"

முறைத்தாள். "எவ்வளவு வல்கரான உதாரணம் சொல்ற?"

"பழைய மொட்டைத் தலை முழங்கால் பழமொழியை எத்தனை தடவை ரிபீட் பண்றது? அதான் புதுசா நானே ஒண்ணு தயாரிச்சேன்."

"நேரடியா என தியரிய பத்தி விமர்சனம் பண்ணு..."

"தேஜி! இப்பல்லாம் கடவுள் பக்தி ஒரு வகை ஃபேன்ஸி. குறுக்கெழுத்துப் போட்டிகள்ல ஜெயிச்சா குலுக்கல்ல நூறோ ஆயிரமோ கிடைக்கும்ன்ற நப்பாசை. இந்த ரெண்டு குணமும் மிடில்கிளாஸ் மக்களின் சொத்து. அப்படியிருக்க, இந்த ரெண்டு குணங்களும் எப்படி இரு உயிர்களை இரை எடுக்கும்? வாதத்துக்கு அப்படி வச்சிக்கிட்டாலும் கம்ப்யூட்டரின் பங்கு என்ன?"

"அவசரப்படாதே டியாரா ஈஸ்வரும் விவிதாவும் கம்ப்யூட்டரின் முன் அமர்ந்து இறந்தது தற்செயலான தற்செயல். போன வருஷம் ஒரு கோவை சாமியார் தனது மனைவி மஹா சமாதி ஆனாதா சொன்னாரில்லையா?"

"ஆமா...."

"அதை நாமும் மீடியாவும் நம்பல. போலீஸ் கூட அந்த சாமியாரைச் சந்தேகப்பட்டு விசாரிச்சது இல்லையா? இப்படி யோசிச்சுப் பாரு டியாரா. ஆன்மீக உச்சத்தில் மஹா சமாதி சாத்தியம்தானோ என்னவோ? அந்த உன்னத நிலையைத் தான் ஈஸ்வரும் விவிதாவும் விரும்பி அடைஞ் சாங்களோ? ஏற்கனவே ஆன்மீகத்ல ஊறினவங்க பாரத் சர்வமத மையத்ல செஞ்சதும் ஆன்மீகப் பணிதானே? 'மகா சமாதியை'த்தான் நாம சதி, மர்ம மரணம், கொலைன்னு சந்தேகப் படுகிறோமோ?"

சிரித்தான் டியாரா.



"நல்லா உன் மூளை வேலை செய்யுது. அப்படின்னா ஈஸ்வரும் விவிதாவும் விரும்பி தனது பணி இடத்தில் அமர்ந்து மஹா சமாதி ஆனாங்கன்னு சொல்ற!"

"எல்ஸாக்ட்லி!"

"மஹா சமாதிக்கு முந்தைய நிலை கோமான்னு எந்த வேதமும் சொன்ன மாதிரி தெரியலையே தேஜி?"

"எல்லா ஆன்மீக சம்பவங்களுக்கும் ஆதாரம் வேதத்ல இருக்க வேண்டிய கட்டாயமா என்ன?"

"இருவருமே மரணநொடில "ஆஹா" ன்னு கூவி பரவசப் பட்டது? ஒரு வேளை இருவரும் பெப்ஸி ஒன்றரை லிட்டர் அடிச்சிருப்பாங்களோ?"

முறைத்தாள் தேஜி.

"துஷ்டா! மஹாசமாதிய கிண்டல் பண்ணாத. மரணத்தை சுகானுபவமாய் உணர்ந்து ஆஹா சொல்லிருப் பார்கள்!"

"ஆஹா! ஓஹா! செம இண்டர்ப்ரட்டேஷன் தேஜி. இன்னைக்கு இவ்வளவு போதும். தலை விண்விண்ணுன்னு வலிக்குது. ரெண்டு லார்ஜ் ஒயிட் ஒயின் உள்ளே போனாத்தான் ரெமடி. அம்மாடி கிளம்புறியா?" கம்ப்யூட் டரை ஆஃப் செய்தான்.

"தொலை!" சபித்தபடி புறப்பட்டாள் தேஜி.

ஒயிட் ஒயினை உறிஞ்சியபடி டியாராவின் மனம் தனிமையில் யோசித்தது.

"மஹா சமாதியா?"

ஓஸாமாயிவின் அதிநவீன விஞ்ஞான சதியா?

"எது உண்மை சொல் அப்பனே?"

விடுகதை இலட்சக்கணக்கான விடுகதைகளை குட்டி போட்டபடி ஆழ்கடல் நோக்கி நீந்தி மறைந்தது!

## 5

**இருளும் அந்தியும்**
**முற்றுகை இட்டு வெந்தது வான்**
**சிரித்தது தன் காலம் நினைத்த**
**மின்மினி**

**- பா.சத்தியமோகன்**

பாரத் சர்வமத ஆராய்ச்சி மையம்.

காரை புகழேந்தி செலுத்தி வர அருகில் தியானேஸ்வரன் அமர்ந்திருந்தார். முகம் கறுத்து தளர்ந்து போயிந்தது. காரை செலுத்திக் கொண்டே புகழ் தியாவிடம் திரும்பினான்.

''ஈஸ்வர், வினிதா மரணம் உங்களை ரொம்ப பாதிச்சிருச்சோ டாட்?"

"இம்!"

"தாத்தன் பணத்தை எப்படியோ புத்திசாலித்தனமான வழிகளில் முதலீடு பண்ணியிருக்கலாம் நீங்க. அத விட்டுட்டு சர்வமத ஆராய்ச்சினுட்டு.... மதங்களே வேணான்றது என் கட்சி. நீங்க எல்லா மதங்களையும் கட்டிக்கிட்டு அழறீங்க. இந்த ஒஸாமாவக் கண்டு ஆனானப்பட்ட அமெரிக்காவே அலறுது. நீங்களும் நானும் எம்மாத்திரம்! எல்லாத்தையும் இழுத்து மூடுங்க டாடி."

தியா மகனை உறுத்தார்.

"என்னால முடியாது புகழ். நீ என்னோட உன்னோட நலன் பாக்ற. நான் வருங்கால சந்ததியினர் நலன் பாக்கறேன். மதங்களை ஒருங்கிணைச்சு மனிதத்தை உயிர்த்திப் பிடிக்கலேன்னா இந்தியா இன்னும் இருபது வருஷத்ல இன்னொரு ரஷ்யாவாய்டும். தேச நலனுக்காக என் உயிர் போனா சந்தோஷம்!"

"என் உயிரும் சேத்துப் போகுமே!" சிரித்தான் புகழ்

"உனக்கு பயமாயிருந்தா என் கிட்டயிருந்து விலகிக்க சொத்தை பிரிச்சுத் தந்திடுறேன். தியானேஸ்வரன் மகன்னு சொன்னா ஆபத்துன அதையும் சொல்லாதே!" கண்கலங்கினார் தியா.

புகழும் கண்கலங்கினான். "ஸாரி டாடி!"

''இட்ஸ் ஓ.கே. உன் இடத்ல யாரிருந்தாலும் இப்படித்தான் பேசுவாங்க. எப்பவும் நெகடிவ்வா ஏன் பாக்றே! BE A OPTIMIST அமெரிக்க FBI அல்லது RAW கூடிய சீக்கிரம் ஓசாமாவை அழித்தொழிக்கும். ப்ரோ இஸ்லாமிக் ஃபண்ட் மண்டலிஸம் வீழ்ச்சியுறும்."



"உங்க கற்பனை நிஜமாகட்டும் டாட்" என்று மையத்தினுள் புகுந்தான் புகழ். தந்தையை இறக்கி விட்டுவிட்டு கிளம்பினான்.

"பை புகழ்."

மகனின் கார் போகும் வரை காத்திருந்தார். மையத்தைச் சுற்றி புதிதாய் அதிரடிப்படை முகாமிட்டிருந்தது.

தனது அறைக்கு நடந்தார். அறை வாசலில் அதிரடிப் படைத் தலைவர் நின்றிருந்தார். வராண்டாவில் கண்காணிப்பாளரும் நூற்றுக்கணக்கானப் பணியாளர் களும் குழுமியிருந்தனர்.

''பயோ-சூட்'' அணிந்த வல்லுநர்கள் ஒவ்வொரு தளத்தையும் சோதனையிட்டுக் கொண்டிருந்தனர்.

சுகாதாரத் துறை இயக்குநரிடம் தியா ஓடினாா. என்ன நடக்குது இங்கே!

"ஸாரி மிஸ்டர் தியானேஸ்வரன். தமிழ்நாடு அரசு கடுமையான உத்தரவு இட்டிருக்கிறது உங்களின் மையத்தை செய்திருக்கிறோம். தேதி குறிப்பிடமால் எங்களின் கிளியரன்ஸ் சர்டிபிகேட் இல்லாமல் இனி நீங்கள் மையப் பணிகளைத் தொடர முடியாது!" அரசாணை நகலை நீட்டினார்.

வாங்கி வாசித்த தியா தலை குனிந்தார். இயக்குநர் நகர்ந்தார்.

மையப் பணியாளர்கள் தங்களுக்குள் தீவிரமாய்க் கிசுகிசுத்துக்கொண்டனர். பின் தெளிந்து தங்கள் சார்பாகப் பேச ஒரு பணியாளரை முன் நிறுத்தினர்.

"சார்!"

"தயங்காம சொல்லுங்க!"

"சார், நாங்கல்லாம் சேர்ந்து கலந்து ஆலோசிச்சு ஒரு முடிவுக்கு வந்துட்டம்!"

"என்ன முடிவு!"

"சுகாதாரத்துறை கிளியரன்ஸ் சர்டிபிகேட் இருந்தாலும் நாங்க பணிக்கு வருவதாக இல்லை. எங்களுக்குக் குடும்பம் இருக்கு சார். எங்களுக்கு ஆராய்ச்சி, இலட்சியம், சம்பளம்,

பதவியை விட உயிர் முக்கியம் அதுவும் எப்படி எந்தக் காரணத்தால் செத்தோம் என உலகத்துக்குக் கூறும் பிணமாக நாங்க தயாரில்லை!"

"எல்லா இரவுகளுக்கும் பின்னும் பகல் வரும்!"

"வராது சார். வரவே வராது சார். நடந்த இரு மரணங்கள் ஓஸாமாவின் சதியோ - உங்களின் சதியோ - அல்லது துர் ஆவிகள் சதியோ? சகாக்களின் சடலங்களின் மீது அமர்ந்து பணிபுரிய நாங்க விரும்பவில்லை!"

"உடனே எந்த முடிவுக்கும் வராதிங்க. இரு வார அவகாசம் தரேன். யோசிங்க!"

"நோ. இது எங்க இறுதி முடிவு?"

"உங்கள் குறை நாள் சம்பளம்?"

பணியாளர்கள் ஏளனமாய்ச் சிரித்தனர். "தேவையில்லை சார். நீங்களே வெச்சுக்கங்க. உங்களுக்கு ஒரு கும்பிடு; இந்த ஆராய்ச்சி மையத்துக்கு ஒரு கும்பிடு!"

இடது உள்ளங்கையால் வாயைப் பொத்திக் கொண்டார் தியா.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய் வணங்கிக் கும்பிட்டு கலைந்து சென்றனர்.

எல்லோரும் கலைந்து செல்ல கண்காணிப்பாளர் மட்டும் நின்றிருந்தார்.

"நீங்க போகல!"

கண்காணிப்பாளர் அழுதார்.

"கோழைகள் பயந்து ஓடுறாங்க. பிரச்சனையான நேரத்துல கை குடுக்கறவன்தான் உண்மையான விசுவாசி. நான் உங்க விசுவாகி. கடைசி வரை உங்க கூடவே இருப்பேன். மரணமே என்னை உங்களிடமிருந்து பிரிக்க முடியும்!"

அவரைத் தட்டிக் கொடுத்தார் தியா.

"நன்றி!"

சுயவிரக்கமாய் யோசித்து யோசித்துத் தியாவுக்கு தலை வலித்தது. தியா தனது அறைக்கு நடந்தார்.



வாசலில் நின்றிருந்த சுகாதாரத் துறைத் துணை அதிகாரிகள் தடுத்தனர்.

"எக்ஸ்க்யூஸ் மீ சார்! நீங்க உள்ளே போகக்கூடாது!"

"என்னுடைய அறைக்குப் போக நான் யார் அனுமதியைக் கேக்கணும்!"

"விதண்டாவாதம் பேசாதிங்க சார். உங்க அறைலயும் வைரஸ் கிருமிகள் இருக்கலாம். அவை உங்களைத் தாக்கி மரணக் குழில தள்ளக்கூடும்!"

முரண்டு பிடிக்கும் குரலில் பேசினார் தியா.

"பரவாயில்லை. அப்படியாவது எனக்கு ஒரு முடிவு வரட்டும்!"

"நோ உங்களை அனுமதிக்க முடியாது!"

சற்றே குரலை இறக்கினார் தியா. "சொன்னாக் கேளுங்கப்பா. சில பிளாப்பிகளை மட்டும் எடுத்துட்டு வந்திடுறேன். அஞ்சே நிமிஷம். ப்ளீஷ்!

"பயோ சூட் அணிஞ்சுட்டுப் போங்க..."

"எனக்கு ஒண்ணும் ஆகா தப்பா..."

தயங்கினார்கள். "சரி சீக்கிரம் எங்க டைரக்டரின் கழுகுக் கண்களுக்குச் சிக்காம போய்ட்டு வந்திருங்க!"

தியானேஸ்வரன் தனது அறைக்குள் பிரவேசித்தார்.

தனது கம்ப்யூட்டரை உயிர்ப்பித்தார்.

சில பிளாப்பிகளை இன்புட் செய்து ஆராய்ந்தார்.

பத்து நிமிடங்கள் முழுதாய் கரைந்தன.

துணை அதிகாரிகளுக்குச் சந்தேகம் பூத்தது. கதவைத் திறந்து கொண்டுச் சந்தேகத்துடன் ஓடிவந்தார்கள்.

மானிட்டரின் முன் அமர்ந்திருக்கும் தியாவைக் கண்டதும் பெருமூச்சு விட்டனர். "லேட் பண்ணி வயிற்றைக் கலக்கிட்டீங்களே சார்... எந்திரிங்க சார் போகலாம்!"

பதில் இல்லை.

"சார்!" அதட்டலாய் விசாரித்தனர்.

பதில் இல்லை,.

சந்தேகமாய் நெருங்கினர். விழித்திருந்தார். தியா. தொட்டதும் கோமா நிலையில் சரிந்தார் தியா.

அவ்வளவுதான்.

அறை அல்லோலகல்லோலப்பட்டது.

தியா மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். வெண்டிலேட்டர் இணைக்கப்பட்டது.

டியாரா ஓடி வந்தார்.

அழும் புகழேந்தியைத் தேற்றினாள் தேவி. இதுதான் சாக்கு என்று புகழ் தேஜியின் மார்பில் சாய்ந்து கொண்டான்.

டியாரா தியாவிடம் குனிந்தார். "நீங்களுமா?"

அசைவில்லை.

மீண்டும் மீண்டும் கேட்டான்.

எதிர்பாராத நொடியில் தியா அசைந்தார். கண்களை பளிச்சென்று திறந்தார். முகத்தில் நிலா நிலா.

ஸ்லோமோஷனில் வாய் திறந்து திவ்யமாய் "ஆஹா" என்றார் தியா. மரித்தார்.

மரணத்தின் கொடூரம் டியாராவின் முகத்தில் அறைந்தது.

தெற்கு ஆப்கானிஸ்தான்.

செயற்கைக் கோள்களை ஏமாற்றும் வெளிப்பூச்சு கொண்ட நவீனக் கூடாரம். ராக்கட் லாஞ்சருக்குக்கூட அசைந்து கொடுக்காத கூடாரம் அது.

பெயர்தான் கூடாரமே ஒழிய உள்ளே அனைத்து வசதிகளும் இருந்தன.

ஓஸாமா தங்க இழைகள் கொண்ட வெள்ளை அரபியன் அங்கி அணிந்திருந்தான். தன யில் தலைப்பாகை,. பாகையின் குஞ்சம் இடது தோளில் தொங்கியது. நீள் முகம்.. கச்சித நெற்றி. அடர்ந்த ஆனால் கச்சித புருவங்கள். நீண்ட மூக்கு சீல் செய்யப்பட்ட தாடியுடன் இணைந்த கனத்த மீசை. முகத்தில் முஜாஹீத்தீன் களை.

ஓஸாமா நிராயுதபாணியாக இருந்தாலும் அவனைச் சுற்றி மூவாயிரம் ஆயுதம் ஏந்திய பாதுகாவலர்கள் வயது 42. மனைவிகள் நான்கு.



ஆப்கானில் ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு இருந்தபோது அமெரிக்காவின் சி.ஐ.ஏ தான் ஓஸாமாவுக்குப் பக்கபலமாய் நின்றது. பின்னாளில் அதே ஓஸாமா அமெரிக்காவுக்குப் பரம வைரியானான்.

அந்த கூடாரத்துக்குள் பிபி.ஸி. பெண் நிருபர் அழைத்துச் செல்லப்பட்டார்.

பெர்ஸியன் கம்பளத்தில் வினோதமாகச் சம்மணமிட்டு அமர்ந்திருந்தான் ஓஸாமா.

ஓஸாமாவின் இருபுறமும் அந்தரங்கப் பாதுகாலவர்கள் நின்றிருந்தனர்.

"அஸ்ஸாமு அலைக்கும்!"

"வ அலைக்கும் ஸவாம்!"

"நான் மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த யாருக்கும் பேட்டி கொடுப்பதில்லை; குறிப்பாகப் பெண்களுக்கு! இருந்தாலும் தொடர்ந்து முயற்சித்து வெற்றி பெற்று விட்டாய். கேட்க வேண்டிய கேள்விகளைக் கேள்!"

"நீங்கள் அமெரிக்காவின் மீது அறிவித்த ஜியாத் புனிதப்போர் தற்சமயம் எந்த நிலையில் உள்ளது?"

"இந்த உலகில் கடைசி அமெரிக்கன் இருக்கும் வரை எங்களது புனிதப் போர் தொடரும்!"

"அல்ஜீரியா, எகிப்து, சௌதி, ஏமன் நாடுகளில் நடக்கும் தீவிரவாதத்தை நீங்கள்தான் ஸ்பான்ஸர் பண்ணுகிறீர்கள் என்று மீடியா சொல்கிறதே!"

"இருக்கலாம்!"

"கார்கில் போரில் உங்களது பங்கு என்ன?"

"விவரித்துச் சொல்ல விரும்பவில்லை!"

"உங்கள் மதத் தீவிரவாதத்தால் உலக அமைதி கெடுகிறதே!"

"இது அமெரிக்கர்களின் பிதற்றல்!"

"இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?"

"சூடானில் காலம் கட்டிக் கொண்டு இருக்கிறேன்!"

"உங்களின் மீது புதிய குற்றச்சாட்டு!"

"என்ன?"

"கார் பாம், ஹியூமன் பாம் கொரில்லா போர் யுக்திகளைச் செயல்படுத்திய நீங்கள் பயோ வாரில் இறங்கலாமா?"

"பயாலாஜிக்கல் வார்பேர் நான் விரும்பத்தகாத ஒன்று!"

"இந்தியாவில் தமிழ்நாட்டில் பாரத் சர்வ மத ஆராய்ச்சி மையம் இயங்கி வருவது உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியுமே, அதன் தலைவர் எங்களுக்கு விரோதி!"

"அந்த மையத்தின் தலைவர் உட்படி மூவர் மர்ம மரணம் அடைந்துள்ளனர். அந்த மையத்தில் நீங்கள்தான் புதுவித வைரஸ் விதைத்து மூவரையும் கொன்றுள்ளீர்கள். அதே வைரஸை அமெரிக்கர்களுக்கு எதிராகவும் பயன்படுத்தப் போகிறீர்கள் என்றும் மீடியாக்களும் இன்டர் நெட்டும் அலறுகின்றன. எது உண்மை!"

ஓஸாமாவின் முகம் கோபத்தால் சிவந்தது.

"அந்த ஆராய்ச்சி மையம் எங்களுக்கு எதிரான பணிகளில் ஈடுபட்டு வருகிறது என்பது எனக்குத் தெரியும் ஏற்கனவே பல முறை அந்த மையத்தைத் தகர்க்கும் பணியில் ஈடுபட்டுத் தோற்றிருக்கிறோம். உண்மைதான் மறுக்கவில்லை. ஆனால் கோழைத்தனமான வைரஸ் கிருமிகளை வைத்து எதிரிகளை வெற்றி கொள்ளமாட்டான் இந்த ஓஸாமா. அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். அந்த மையத்தில் நடந்த மூன்று மரணங் களுக்கும் எங்களுக்கும் துளியும் சம்பந்தமில்லை! கார்கில் போரில் பாகிஸ்தான் நடந்து கொண்ட முறை எங்களுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே இன்னும் சில காலத்துக்கு இந்தியாவில் தீவிரவாதத்தை ஸ்பான்ஸர் செய்வதை நிறுத்தி வைக்கப்போகிறேன்."

நிருபர் மேலும் எதுவோ கேட்கப் போக, பாதுகாப்பு அதிகாரி கையமர்த்தினார், தேவைக்கு அதிகமாகக் கேள்விகள் கேட்டுவிட்டீர்கள். நீங்கள் புறப்படலாம்!

டி.வி.யைப் பார்த்துக் கொண்டிருந்த டியாரா ஸ்தம்பித்தாள்.



ஓஸாமா மதத் தீவிரவாதிதான். ஆனால் பொய் பேசாதவன். பாரத் சர்வ மத ஆராய்ச்சி மையத்தின் மூன்று மரணங்களுக்கும் தான் காரணமில்லை என்பதை அறுதியிட்டுக் கூறுகிறான்!

மூன்று மரணங்களும் மூன்று திட்டமிட்ட கொலைகள்.

ஓஸாமா இல்லை.

பின்னே யார்?

"ஒளிந்திருக்கும் கொலையாளியே விரைவில் உன் முகத்திரை கிழிப்பேன்!" சூளுரைத்தான் டியாரா.

பல அடுக்குகளில் முகமூடி அணிந்திருக்கும் மர்மம் முதல் முகமூடியை உரித்து வீசிவிட்டுச் சிரித்தது!

எல்லா முகமூடிகளையும் உரித்தெறிந்துவிட்டால் பார்வைக்குக் கிடைக்கப்போகும் முகம் எது? அல்லது முகமே இங்கு இல்லையா?

சாரைப்பின்னல்கள்! சாரைப்பின்னல்கள்!

## 6

ஞாபக நெளிசல்
அறுக்க முடியாத
கூழைப்பாம்பு!

*- பா. சத்தியமோகன்*

ஆறு மாதங்களுக்குப்பின்

டியாரா லீ ஜீன்ஸ்சும் டியூக் டி சர்ட்டும் உடுத்தியிருந் தான்.

தேஜி பேகிஸ் ட்ரவுசரும் பேகிஸ் சர்ட்டும் அணிந்திருந்தாள்.

எதிர் எதிரே அமர்ந்து கொண்டனர்.

"உன் பாய் ப்ரண்டு எப்படியிருக்கான்!"

"யாரைச் சொல்ற டியாரா?"

"புகழ் என்கிற புகழேந்தி!"

"ரொம்பக் குழந்தைப்பா அவன். என்கிட்ட ரொம்ப அட்டாச் ஆயிட்டான். அப்பா டெத் அவனை மிகமிகப் பாதிச்சிருச்சு. ஹிஸ்டீரிகலாய் அழுறான். தியா மரணத்தை

அவனால மட்டுமா ஜீரணிக்க முடியல! என்னனாலயும்தான். வாரம் ரெண்டு முறை சந்திச்சிடுறா. ஊர்க்கதை உலகத் துக்கதை பேசுவான். அவனைத் திருப்திப்படுத்த கேப்பேன்!"

"அவனுடைய படிப்பு என்னாச்சு!"

"நிறுத்தல படிக்கிறான். இருந்தும் பல பிசினஸ் பண்றான். எல்லாம் சக்ஸஸ்ஃபுல்லா போகுதாம்!"

"அவன் புராணத்தை விடு. வேறு எதாவது பேசுவோமா?"

"சரி!"

"சர்வமத ஆராய்ச்சி மையத்தில் மூன்று மரணங்களுக் கும் காரணம் கண்டுபிடிக்கப்படலை - பாத்தியா தேஜி."

"ஆறு மாசமாச்சு, இன்னுமா அதை மனசுலே போட்டுக் குழப்பிட்டுருக்க. பக்கிரான் மகன் கிட் நாப்பிங் கேஸ் பற்றி பேசு".

"இன்னும் அந்த மரணங்கள் என் மனசை உறுத்திக்கிக் கிட்டு இருக்கு தேஜி. நீ சொல்ற மாதிரி அவரை லேசுல விட்றமாட்டேன். ஐ வில் ட்ராப் தி மர்டரர்!"

"கொலை-கொலையாளி வார்த்தைகளை உபயோகிக் காத மிஸ்டீரிகல் கேஸ்."

''காவல்துறையும் நாமும் பிரம்மப் பிரயத்தனம் பண்ணியாகி விட்டது. இன்னுமே அந்த மரணங்கள் இயற்கையா, செயற்கையான்னு ஒரு முடிவுக்கு வர முடியல..."

"நீ என்ன சொல்லு. நிச்சயமா கொலைதான், நடந்தது கொலைதான்."

தேஜி சிரித்துக் கொண்டாள்.

"நீ பேசுற டாபிக்கை அப்றம் எடுத்துப்பம். நடந்த மூன்று மரணங்களைப்பற்றி மீடியால உலவுற சுவாரசியமான வதந்திகள் அறிவாயா டியாரா!"

"தெரியும். இருந்தாலும் உன் வாயாலே சொல்லேன்!"

"ஆராய்ச்சி மையம் இருந்த இடத்துல ஒரு காலத்துல சுடுகாடு இருந்துச்சாம். அந்த சுடுகாட்டின் ஆவிகள் செய்யும் சேட்டைகள்தான் நடந்துள்ள மரணங்களாம்!"



"வாவ் . போல்ட்டர் கைஸ்ட் வகை வதந்தி அப்பறம்!"

"எல்லா கடவுள்களும் பொய். பெயரில்லாத கடவுள் கொண்ட மதம் செய்வோம்! என தியானேஸ்வரன் அறை கூவல் விடுத்திருந்தார் இல்லையா! அதனால் கடவுள்களின் கோபத்துக்குத் தியாவும் அவரது சகாக்களும் ஆளா னார்கள்!"

சிரித்தான் டியாரா.

"அப்படின்னா வார்டு கவுன்ஸிலர்கள் எண்ணிக்கைக்கு சமமா கடவுள்கள் இருக்காங்கன்ற..."

அப்படின்னு நான் சொல்லப்பா; மக்கள் சொல்றாங்க!

"அடுத்த வதந்தி!"

"குறைந்த விலைக்கு மையம் இருந்த இடத்தை வாங்க ரியல் எஸ்டேட் காரங்க செய்ற மருத்துவச் சதியாம்!"

"ஓ!"

''அதைவிடப் பெரிய கொடுமை.... தியாவின் மரணத்துக்கு எல்லா மதத்தலைவர்களும் இரகசிய சந்தோஷம் அடைஞ்சது!"

"என்ன பண்றது! இதுதான் இந்தியா!"

"நடந்த சோகத்தில ஒரு மைக்ரோ பயாலஜிஸ்ட் செமத்தியா விளம்பரம் தேடிக்கிட்டார் பாத்தியா டியாரா!"

"சொல்லு...."

''ஒரு குறிப்பிட்ட கம்பெனி உற்பத்தி செய்யும் கம்ப்யூட்டர்கள்ல பணிபுரிவோர்க்கு ஒரு மர்ம வைரஸ் சாவு நிகழுதுன்னார்!"

"விளைவு!"

"அந்த குறிப்பிட்ட வகை கம்ப்யூட்டர்கள் விற்பனை கடந்த ஆறு மாசத்ல படுபயங்கரச் சரிவைச் சந்திச்சிருக்கு. அந்த கம்ப்யூட்டர் நிறுவனம் வதந்திகளை நம்ப வேண் டாம்னு மாய்ஞ்சு மாய்ஞ்சு எல்லா ஆங்கிலத் தமிழ் தினசரி களிலும் விளம்பரம் செஞ்சுக்கிட்டுருக்காங்க."

"ரெடிகுலஸ், இந்த மர்ம கேஸின் முடிவுதான் என்ன!" டியாரா.

"நோ எண்ட். தீர்க்கப்படாத மர்மமாய் எப்போதும் நீடிக்கும்!"

"ஓஸாமாவின் செயல்பாடுகள் கடந்த ஆறு மாசத்ல அழுத்தமான குளிர்நிலை தூக்கத்தில் ஆழ்ந்திருச்சே... ஏன் தேஜி?"

"அமெரிக்க தலிபான் மீது பிரயோகிக்கும் அரசியல் நிர்பந்தமே அடிப்படைக் காரணம். மேலும் அமெரிக்க அதிரடிப்படை ஓஸாமாவைப் பிணமாக்க பல கொரில்லா யுக்திகளை கையாண்டு வருகிறது. எப்படியும் ஓஸாமாவின் அழிவு அமெரிக்காவின் கைகளில் தான்..."

"அடேயப்பா, சர்வதேச பிரச்சனைகளை அட்டகாசமாய் அலசி ஆராய்ற!"

"என்னை சாதாரணமா நினைச்சியா! என்னால் பல அரசியல் ஆரூடங்கள் கூடச் சொல்ல முடியும்"

"சொல்லேன்" தூண்டினான்.

"கி.பி.2020க்குள் பாகிஸ்தானிலுள்ள ஷியா - சன்னி பிரிவுகளுக்கும் இடையே சண்டை மூண்டு உள் நாட்டுப்போர் வெடிக்கும் பாகிஸ்தான் மேலும் பிளவுபடும். சில பிளவுபட்ட பகுதிகள் பொது வாக்கெடுப்பு நடந்தி இந்தியாவுடன் இணையும்."

"இலங்கை ருவாண்டாவை விட மோசமான நிலைக்கு பாயும். இந்தியாவுக்கு பிரியங்கா தான் பிரதமர். தமிழ் நாட்டில் வை.கோதான் முதலமைச்சர்!"

"தாயே! போதும்மா. உன் நாஸ்ட்டர்டாம் வேலை போதும்மா. மற்ற பணிகளையும் கவனிப்போமா!"

"இன்னும் ஒண்ணே ஒண்ணு. உன் மகன் நிலாமகன் உன்னைவிட உயரமான உயரத்துக்குக் கொடி பிடிப்பான் - ஸயின்ஸ் பிக்ஷன் எழுதுறதில...."



"வந்தால் சந்தோஷம்!" கூறியபடி டியாரா டிஜிட்டல் டைரியை எடுத்தான். அன்றைய நிகழ்ச்சி நிரலை வாசித்தான்.

"என்ன!"

"மணிமேகலைப் பல்கலைக் கழகத்தோட செனட் ஹால்ல நான் சிறப்புரை ஆற்ற இருக்கேன்!"

"தலைப்பு!"

"நவீன விஞ்ஞானப் புதினங்கள்!"

"எப்ப!"

"இன்னைக்கி காலைல 11 மணிக்கு!"

"கிளாஸ் நடக்கிற நேரத்திலா?"

"ஃபர்ஸ்ட் அவருக்குப் பிறகு வகுப்புகள் விடுமுறை. கட்டாயம் நல்ல கூட்டம் இருக்கும்!"

"குட், பேச்சுக்குக் குறிப்புகள் தயார் செய்து விட்டாயா?"

"ஓ!"

"கூட்டத்துக்கு நான் வரலாமில்லையா!"

"ஓய் நாட்! என்ன.... நான் மாணவியரிடம் ஜொள்ளு விடும் போது நீ கண்டுக்கக்கூடாது!"

"தொலை!"

காலை மணி 09.35

டியாராவும் தேஜியும் ஃபுல் சூட்டுக்கு மாறியிருந்தனர். பல்கலைக் கழகத்திலிருந்து நான்கு மாணவிகள் வந்திருந்தனர். வந்தவர்கள் டியாராவின் முதுகை உரசி உரசிக் கொஞ்சுவது ரேஜிக்கு எரிச்சல் மூட்டியது.

புறப்பட்டனர்.

மணிமேகலைப் பல்கலைக் கழகம் ஒரு மெஹா டன் திகில் தரக் காத்திருந்தது.

**ம**ணிமேகலைப் பல்கலைக் கழகம். சென்னையிலிருந்து நாற்பதாவது கிலோ மீட்டரில் அமைந்திருந்தது.

முப்பதாயிரம் மாணவ மாணவியர் படிக்கும் மெஹா கல்விக்கூடம் ஆராய்ச்சி சார்ந்த ரெஸிடென்ஷியல் யுனிவர்சிட்டி அது. பல்கலைக் கட்டடங்கள் ஜெர்மன்

தொழில் நுட்பத்தில் கட்டப்பட்டவை. ஒவ்வொருதுறை கட்டிடத்தின் முன்னும் பின்னும் தோட்டங்கள்.

வண்ணத்துப் பூச்சி குழுமமாய் மாணவர் மாணவியர்.

வாகனங்கள், வாகனங்கள், நகர்ச்சி... நகர்ச்சி.

அப்போதுதான் அது நடந்தது!

ஒரு மரத்தடியில் ஒரு ஓபஸ் ஆஸ்ட்ரா வந்து நின்றது. அதிலிருந்து 45 வயது மத்திமன் இறங்கினான்.

இடது கையில் லேப்டாப் கம்ப்யூட்டர்.

தலையில் கிரிக்கெட்டர் தொப்பி. கண்களில் குளிர் கண்ணாடி, நீலநிற ஃபுல் சூட்டில் மிடுக்காய் இருந்தான்.

நடந்தான்.

நடை வித்தியாசமாய் இருந்தது. ராணுவவீரன் மப்டியில் நடப்பது போல். கணிதத் துறை வாசலுக்குப் போனாள்.

கோட்பாக்கெட்டிலிருந்து ஒரு புகைப்படத்தை எடுத்து வெறித்தான்.

புகைப்படத்திலுள்ள ஆசாமி பைக்கில் வருவதை உறுதி செய்து கொண்டான் . பைக்கை மறித்தான்.

"எக்ஸ்க்யூஸ் மீ ஸார்! நீங்கதானே அலாவுதீன்!"

"எஸ். நீங்க!"

"நான் அஸ்கர் பாஷா உங்கள் நண்பர் கிருஷ்ணனின் நண்பன் ஸ்டேட்ஸ்ல அவர் கூடத்தான் பணிபுரியுறேன்!"

கிருஷ்ணன் பெயர் உச்சரிக்கப்பட்டதும் அலாவுதீன் முகம் மலர்ந்தான். அதனை அஸ்கர் கவனித்துக் கொண்டான்.

"கிருஷ்! என் இனிய நண்பன்! எப்படியிருக்கான்? பார்த்து பல வருஷமாச்சு"

"வாங்க சார்! காருக்கு நடந்துக்கிட்டே பேசுவோம்!"

"கார்ல என்ன!"

கிருஷ்ணன் உங்களுக்குள் கொடுத்துவிட்ட கடிதமும் பரிசுப் பார்சலும் அதிலதான் இருக்கு!

நடந்தான். அலாவுதீன் தொடர்ந்தார்.



காரின் பின் கதவைத் திறந்து விட்டான். அலாவுதீன் பின்னிருக்கைக்குக் குனிந்தார்.

"ஆற அமர உக்காந்து கிப்ட்டை பிரிச்சி பாத்துட்டு நண்பரோட கடிதத்தை வாசிங்க சார். இன்னும் கிளாஸ் ஆரம்பிக்கப் பதினைஞ்சு நிமிடம் இருக்கு!"

"ஓ.கே!" அலாவுதீன் அமர்ந்து கிப்ட் பேக்கைப் பிரித்தார்.

அழகிய ராடோ கைக்கடிகாரம்!

"வாவ்!"

கடிகாரத்தை ரசித்தபடியே கடிதத்தை வாசித்தார்.

சில வரிகள் வாசித்த பிறகு நெற்றி சுருக்கினார்.

நிமிர்ந்தார்.

"மிஸ்டர் இது கிருஷ் கையெழுத்துக் கிடையாதே!"

"பல வருஷ இடைவெளி. கையெழுத்து மாறிப் போயிருக்கும் சார்!"

"இல்லவே இல்லை. இது கிருஷ் கையெழுத்து இல்லை!"

வந்தவன் வெறித்தான். "என்னை நம்பலையா நீங்க? அப்படின்னா உங்களுக்கு இந்த ராடோ வாட்ச் வேணாமா!"

நக்கலாய்ச் சிரித்தான்.

"வேணாம் வேணாம். இதுல ஏதோ சூது இருக்கு!"

"ஓஸாமா தெரியுமா உனக்கு!"

"கேள்விப்பட்டிருக்கேன்!"

"அந்தாளு இயக்கி நான் சூது பண்ண வந்திருக்கேன்!" மயக்கத் துப்பாக்கியை எடுத்துச் சுட்டான்.

"டுஷப்!"

கழுத்தில் மயக்க ஊசி தைத்தது. அமர்ந்த நிலையில் முன்னுக்குச் சரிந்தார் அலாவுதீன் ரெக்ஸின் ஸீட் போட்டு மூடினான். கார்க் கதவுகளைச் சாத்திப் பூட்டினான்.

தான் கொண்டு வந்திருந்த போலி அடையாள அட்டையை நெஞ்சினில் மாட்டிக் கொண்டான். பல்கலைக் கழக மணிக் கூண்டு ஐந்து கிலோ மீட்டர் சுற்றளவுக்கு

கேட்கும் வண்ணம் நாதம் எழுப்பியது. அலாவுதீன் பாடம் நடத்த வேண்டிய அறைக்கு அந்த அந்நியன் நடந்தான் ஹைடெக் சாத்தானாய்!

**7**

**காண நினைத்த**
**பறவை இறகு காணமாட்டாய்**
**மனமான பறவை நீயே!**

**- பா. சத்தியமோகன்**

**வகுப்பறை**

சலசலவெனப் பேசிக் கொண்டிருந்த மாணவக் குழுமம் அந்நியன் வருகையால் அமைதியற்று எழுந்தது. அமரச் சொன்னவுடன் அமர்ந்தது.

இருக்கையில் அமராமல் மேஜையில் ஸ்டைலாகச் சாய்ந்து கொண்டான் அவன்.

"நீங்கல்லாம் பி.எஸ்.ஸி முதல் வருடம் கணிதம் இல்லையா!"

"யெஸ் சார்! கோரஸ்."

"இந்த யுனிவர்சிடி உங்களுக்குப் புத்தம் புதுசு இல்லையா!"

"யெஸ் சார்!"

"நானும் வருஷா வருஷம் புதியவன்தான். வகுப்புல மொத்தம் அறுபது பேர் இருங்கீங்க. அறுபது பேரும் விரும்பியா கணக்கைத் தேர்ந்தெடுத்தீங்க!"

"சிலர் விரும்பி வந்தோம் சார். சிலர் வேறு துறை கிடைக்காமல் வந்தோம்!"

"கணிதத்தைக் குறைவா மதி ப்பிட்ராதீங்க ப்ரண்ட்ஸ் கம்ப்யூட்டர் தனது தகவல்களை எண் கணித முறைலதான் சேமிக்குது. வெளிக் கிரகங்கள்ல உயிர் இருந்தா அவை நம்பளோட என் கணித பாஷைலதான் பேசும். எகிப்து பிரமிடுகள் கூடக் கணிதத்தை அடிப்படையா வச்சுத்தான் கட்டப்பட்டிருக்கு. அவ்வளவு ஏன். கணிதத்தின் பூஜ்யம் மரணத்தின் குறியீடு!"



மாணவர் பரவசமாய் அயர்ந்தனர்.

"ஒவ்வொரு எண்ணுக்கும் ஒரு மகிமை இருக்கு. ஒரு மகத்துவம் இருக்கு. ப்ரண்ட்ஸ்! சில எண்கள் ராசியானவை; சில எண்கள் தோசியானவை! எண்களுக்கும் மனித முகங் களுக்கும் நெருங்கிய தொடர்பிருக்கு! (ஒரு மாணவனை எழுப்பி) 9.9.1972 பிறந்திருப்ப. சரியா!"

அந்த மாணவன், "ஆ.... ஆமா சார்!"

"எண்கள் ராசிகளை விட வலிமையானவை. சில தேதிகள் இயேசுநாதர் போன்ற மகான்கள் அவதரிக்க முன்பதிவு செய்யப்பட்டவை. சில தேதிகள் துர்மரணங்கள் நடக்கச் சமைக்கப்பட்டவை. ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட தேதி 21.5.91. கூட்டுத் தொகை 9. எண் ஒன்பது ராஜீவுக்கு ஜென்மப்பகை. ராஜீவ் 22.5.91 ஸ்ரீபெரும்புதூர் வந்திருந்தா சதியிலிருந்து உயிர் தப்பிச்சிருப்பார். அவ்வளவு ஏன்? இன்னைக்கு தேதி கூட துர்மரணங்கள் நடக்க உறுதி செய்யப்பட்ட நாள்!"

"எப்படி சார்!"

"விளக்கிச் சொல்லமாட்டேன். இன்னொரு புதுத் தகவல் சொல்றேன் கேளுங்க. சூரியனுக்கும் பூமிக்கும் இடைத்தூரம் - சூரியனுக்கும் மற்றக் கோள்களுக்கும் இடைத்தூரம் - பூமிக்கும் துணைக்கோள் நிலாவுக்கும் இடைத் தூரம் ஒரு கணித சூட்சமத்துடன்தான் அமைக்கப்பட்டிருக்கு. இடைத்தூரத்துல ஒரு மீட்டர் குறைஞ்சாலோ ஒட்டு மொத்தப் பிரபஞ்சம் கொலாப்ஸ் ஆய்ரும்!"

மாணவர்கள் உலக சுவாரசியமாயினர்.

"ஓவ்! தாக்குதலுக்குச் சரியான தருணம்."

வந்தவன். "ஓ.கே." பாடத்துக்கு போவதை (லாப்டாப் கம்ப்யூட்டரை விரித்து) வந்த வேலையை கவனிக்கணு மில்லை! பட்டன்களை தட்டினான்.

நிமிர்ந்தான்.

அவன் முகம் அமானுஷ்யமாய் மிளிர்ந்தது.

ஸாண்ட்ரோவிலிருந்து டியாராவும் தேஜியும் வந்திறங்கினர். இருவரும் தத்தம் ஃபுல்சூட்டின் பின் பகுதியை நீவி விட்டுக் கொண்டனர். நடந்தனர்.

தூரத்தில் ஒரு மத்திம வயதினன் தனது ஒபல் ஆஸ்ட்ராவுக்கு நடந்து போவதை டியாரா கவனிக்கவில்லை. டியாரா செனட் ஹாலுக்கு மாடியேறினான்.

அந்நியன் தனது காரின் பின் கதவைத் திறந்தான். வாயில் பிளாஸ்திரி ஒட்டப்பட்ட நிலையில் மயக்கம் தெளிந்திருந்தார் அலாவுதீன்.

அவரது காதில் சிறிது நேரம் கிசுகிசுத்தான்.

சிறிது நேரம் அலாவுதீன் மூலம் க்ளைடாஸ்கோப்ப பாவங்கள் காட்டிபின் இறுகி உறைந்தது.

அவரை அமர் நிலையில் தூக்கி மரத்தடியில் உட்கார வைத்தான். காரைக் கிளப்பி மறைந்தான்.

செனட் ஹால். சம்பிரதாயங்களுக்குப் பிறகு டியாரா உரையாற்ற ஆரம்பித்தான்.

உரை சுவாரசியமாய் போகும் போது ஒரு மாணவன் தலைதெறிக்க ஓடிவந்தான்.

"அய்யய்யோ! அய்யய்யோ!"

டியாரா பேச்சை நிறுத்தித் திரும்பினான். என்னப்பா?

வந்தவன் திக்கித் திணறி, "பி.எஸ்.ஸி. முதல் வருட ஸ்டூடன்ட்ஸ் வகுப்பறை பேயறைஞ்ச மாதிரி சுயபிரக்ஞை இல்லாம உட்காந்திருக்காங்க. துறைக்கு எதிர்த்த மரத்தடில ரீடர் அலாவுதீன் மயக்கமா கிடக்கார் சார்!"

அவ்வளவுதான்.

கூட்டம் கலைந்தோடியது.

அந்தக் குறிப்பிட்ட வகுப்பறைக்குள் பிரவேசித்த அனைவரும் திடுக்கிட்டனர். பழைய காலத்து மந்திரவாதிகள் மந்திரக்கோலால் இளவரசன் இளவரசிகளைக் கல்லாய்ச் சமைப்பார்களே! அதனைப் போல மாணவர்கள் இங்கு அவரவர் இருக்கையில் உறைந்திருந்தனர்.

அறுபது பேரும் கோமாவில்.



உள்ளே வைரஸ் கிருமிகள். நிறைந்திருக்கும் என்ற பயத்தில் அனைவரும் அறையின் வாசலுக்குப் பின் வாங்கினர்.

செல் ஃபோனில் பேசி டியாரா மருத்துவர் குழுமத்தை வரவேற்றான்.

அறுபது மாணவர்களையும் அலாவுதீனையும் பரிசோதித்தனர் மருத்துவர்கள்.

கெட்டதில் ஒரு நல்ல நிகழ்வு.

அறுபது மாணவர்களின் ஐம்பது மாணவர்கள் முதலுதவிக்குப் பின் சுய பிரக்ஞை மீண்டனர். மீதிப் பத்து மாணவர்களும் அலாவுதீனும் கோமா நிலையிலிருந்து ஒரு மைக்ரோ செகண்ட் மீண்டு முகம் சூரியனித்து "ஆஹா" என பரவசப்பட்டு மரித்தனர்.

டியாரா பேய்த் தனமாய்க் காலைத் தரையில் உதைத்து "ஷிட்!" என்ற வார்த்தையை நூறு முறை கூவினான்!

பல்கலை முழுதும் பரபரப்புத் தீப் பற்றிக் கொண்டது பத்தாயிரம் மாணவர் குழுமம் கணிதத் துறைக்கு பாய்ந்து பறந்து வந்தது. பல்கலை உயர் அதிகாரிகளும் காவல்துறை அதிகாரிகளும் கூட அபரிமிதமாய்க் கூடியிருந்தனர்.

பதினோரு பிணங்களும் வரிசையில் கிடத்தப்பட்டு வெள்ளைப் போர்வை போர்த்தப்பட்டு....

மாணவ மாணவியர் கதறி அழுதனர்.

துணை வேந்தர் மாணவர்களைச் சமாதானப்படுத்த முயன்று தோற்றார். பயோ- சூட் நிபுணர்கள் கணிதத்துறை வகுப்பறைக்குள் வைரஸ் தேடிக் களைத்தனர்.

மருத்துவத் துறை இயக்குநரிடம் டியாரா, கொலை நடந்தத நாங்க நேர்ல பாக்கலையே தவிர... எப்படி நடந்திருக்கும்னு எங்களால யூகிச்சுச் சொல்ல முடியும்! தொடர்ந்தான். "ஆறு மாசத்துக்கு முன்னாடி அடையாறு சர்வமத ஆராய்ச்சி மையத்துல நடத்த மூன்று மரணங்களுக்கும் இன்று நடத்திருக்கும் பதினோரு மரணங்களுக்கும் நெருங்கின தொடர்பிருக்கு. கொலையாளி ஒரே ஆசாமிதான். அவன் அல்லது அவள் கொலை செஞ்ச யுக்தியைத் துல்லியமாகக் கணிக்க முடியல..."

இயக்குநர், "ஆமா டியாரா! ஒரு மனுசன் கோமா நிலைக்குப் பாயச் சில பல காரணிகள் உள்ளன. தலைக்காயம் - மஞ்சள் காமாலை - சர்க்கரை நோய் உச்சம் - பக்கவாதம். ஆனா இதுல எதுலயும் சேராத கோமா - செத்தவங்களுக்கு!"

டியாரா பெருமூச்சு விட்டான். "ஆராய்ச்சி மைய மரணங்களுக்குக் கற்பிக்கப் பட்ட தியரிகள் இன்றைய மரணங்களுக்கு ஒத்துவரலையே..."

ஆமோதித்தார் இயக்குநர் டியாரா துணைத்தலைவரிடம் திரும்பினான். "இழந்த மாணவர்கள் பல்கலைக்குப் புதுசு இல்லையா! இன்னிக்கித்தானே அவங்க முதல் நாள் வகுப்பை அட்டெண்ட் பண்ணினாங்க! இறந்த அலாவுதீன் தானே ஃபர்ஸ்ட் பீரியடு வகுப்பை எடுக்க இருந்தது!"

மூன்று கேள்விகளுக்கும் துணைத் தலைவர் "ஆமா சார்!"

மரத்தடிக்கு நடந்தான் டியாரா. மண் தரையை வருடினான். டயர் தடயம்.

மே பி MRP ZIGMA டயர் கொலையாளி வந்த கார் ஆஸ்ட்ராவோ!

தேவாவும் தேஜியும் மிக இலேசாகத் தலையாட்டினர்.

அலாவுதீன் உடலை டிஸ்போஸபிள் கிளவுஸ் அணிந்து ஆராய்ந்தான் டியாரா. கழுத்தில் மயக்க ஊசி இரத்தப்புள்ளி தெரிந்தது. வாய்ப் பகுதியில் பிளாஸ்திரி ஒட்டி உரித்த அடையாளம்.

உறைந்திருந்த இரத்தப் புள்ளியை விரலால் ஒற்றி முகர்ந்தான் டியாரா. "அலாவுதீனைக் கொலையாளி மயக்கத் துப்பாக்கியால் சுட்டு மயக்கப்படுத்தியிருக்கிறான்!"

"அஃப் கோர்ஸ்!"

"தேவா! கொலையாளி." கார்ல

வந்திருக்கான் அலாவுதீனை மயக்கப்படுத்திட்டு கொலையாளி வகுப்பறைக்கு போய்.... வகுப்பறைக்கு போய்...

"போய்..."



"ஒரு கடுமையான நொடிக்கு நொடி லட்டிசக் கணக்குல பல்கிப் பெருகும் வைரஸ் கிருமிகளை மாணவா மீது ஸ்ப்ரே பண்ணி விட்டு காருக்குத் திரும்பியிருக்கிறான் கொலையாளி. மயங்கிக் கிடந்த அலாவுதீன் மீதும் வைரஸ் ஸ்ப்ரே பண்ணிவிட்டு காரில் பறந்து விட்டான்!"

"வைரஸ் என்ன அவனது வளர்ப்புத் தாயா? வகுப்பிலிருந்தவர்களை வீழ்த்தும் அது கொலையாளியை எப்படி விட்டு வைக்கும்!"

"ஆன்ட்டி-வைரஸ் டோஸ் எடுத்திருப்பான்!"

"வைரஸ் வழி கோமா- எப்படி!"

"சிரிக்க வைக்கும் வாயு இல்லையா! வைரஸ் நொடிக்கு நொடி இயல்பையும் வடிவத்தையும் மாற்றிக் கொள்பவை. நமது மருத்துவ உலகிற்கு அறிமுகமாகாத வினோத வைரஸ் கொலையாளி வைத்திருக்கிறனோ என்னவோ!"

ஒரு மாணவன் குறுக்கிட்டான். "கொலையாளிய நான் பார்த்தேன் சார்!"

"மொதல்லயே ஏன் சொல்லல!"

"பயம். இப்பத் துணிஞ்சிட்டேன் சார். வந்தவனுக்கு வயசு நாற்பது நாப்பத்தஞ்சு இருக்கும். தலையில தொப்பி அணிஞ்சிருந்தான். கைல சூட்கேஸ் மாதிரி ஏதோ பி.எஸ்.ஸி. கணிதம் முதலாமாண்டு வகுப்பறைக்குள்ள அவன் நுழையுறத நான் பார்த்தேன்!"

"அந்நாளை எத்தனை மணிக்குப் பாத்த!"

"பத்து மணிக்கு!" 55415/6140987

"கார்ல வந்தானா?"

வில்லிவாக்கம்
சென்னை-49

"அதை நான் பாக்கல!" ரூ 60/-

"அப்பறம்!"

"அவன் வகுப்பறைக்குள்ள போனது தெரியும். உள்ள என்ன நடந்துச்சு. அந்த ஆளு வகுப்பறையிலருந்து எப்பத் திரும்பினான். அவன்தான் மெய்யாலுமே கொலையாளியா - எனக்குத் தெரியாது. நான் இந்தப் பல்கலைல அஞ்சு வருஷமா படிக்றேன். ஒரு விஷயம் என்னால உறுதியாச் சொல்ல முடியும். வந்தவன் பல்கலைக்கு முழுக்க அந்நியன்!"

"நீ பார்த்த ஆளைத் திரும்பப் பார்த்தா அடையாளம் கண்டுப்பியா!"

தயங்கி ஓரளவு!

"தேவைப்பட்டா உன் உதவியோட கொலையாளியோட ஐடென்டிகேட் படம் தயார் பண்ணிக்கிறோம்!" மாணவனின் பெயர், வகுப்பு, ஹாஸ்டல் முகவரி குறித்துக்கொண்டார்.

விசாரணை தொடங்கியது. பிரேதங்கள் அப்புறப்படுத்தப் பட்டன. பல்கலை காலவரையின்றி மூடப்படும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மாணவ மாணவியரிடம் கொலையாளியைக் கட்டாயம் கண்டுபிடித்துத் தூக்குத் தண்டனை பெற்றுத்தருவதாக உறுதி கூறி விடைபெற்றனர் டியாராவும் தேஜியும்.

கார் அடையாறைத் தாண்டும்போது பாரத் ஆராய்ச்சி மையம் தென்பட்டது. மையத்தின் முன் கும்பல்.

"என்ன நடக்குது இங்க!"

"கட்டடத்தை சிறப்பு வெடி வச்சுத் தகர்க்கிறோம். இதை விலைக்கு வாங்கினவர் உத்தரவு. இடிச்சிட்டு அபார்ட் மெண்ட்ஸ் கட்டப் போறாங்களாம்!"

வெடி நிபுணர் மெஹா போனில் கூவி கூட்டத்தை விரட்டி ரிமோட்டை அமுக்கினார். மையம் பக்கத்து கட்டடங்களுக்கு துளியும் பங்கம் விளைவிக்காமல் நொறுங்கியது.

"ஷிட்! கொலையாளியால எத்ன கோடி பணம் உயிர் நட்டம். வேலை நாட்கள் விரயம்! டியாரா."

தேஜி! "டியாரா! என்னை இங்க இறக்கிவிட்டுப்போ!"

"ஏன்!"

"இறக்கிவிடேன். பின்னாடி சொல்றேன்!"

"ஓகே!" இறக்கிவிட்டான். இறங்கிய "தேஜி கையசைத்து விடை கொடுத்தாள்" டியாரா கிளம்பினான்.

இரும்புத் தொப்பி ஆசாமியிடம் "தேஜி நீங்கதான் டெமாலிஷன் ஸ்குவாடு தலைவரா?"

"ஆமா!" பரஸ்பர அறிமுகம் நடந்தது.



"எனக்கு ஒரு உதவி நீங்க செய்யணும்!"

"தாராளமா..."

சொன்னாள். தேஜியை ஆர்வமாய் அழைத்துச் சென்றார். வெடிப்பு நிபுணன்.

ஆளுயரக் கண்ணாடி முன் அவன் நின்று சிரித்தான். கண்ணாடியில் தெரிந்த தனது உருவத்திடம் உரக்கப் பேசினான்.

"மொதல்ல ரிசர்ச் சென்டர். இன்னைக்கு யுனிவர்சிடி. நாளைக்கு ஒரு செமினர் ஹால். இந்த ஆபத்தான - அபூர்வமான - அசத்தலான உலகில் இதுவரை யாரும் செய்யாத உயிர் விளையாட்டுக்கு முடிவே இல்லை. டிடெக்டிவ் டியாரா என்ன... அந்தக் கடவுளே (இருந்தால்) வந்தாலும் என் மாயலீலைகளைத் தடுத்து நிறுத்த முடியாது!"

கடவுள் இயலாமை - பயத்துடன் முகத்தை மூடிக் கொண்டார்!

தேஜி வானத்துக்குக் கை உயர்த்திச் சிரித்தான்.

"தலைவா! கொலையாளியை கண்டுபிடிச்சிட்டேன்!"

"எப்டி? எப்டி? எப்டி? யாரது?"

"சில நாட்களுக்கு முன் இடிக்கப்பட்ட ஆராய்ச்சி மையத்தின் முன் என்னை இறக்கிவிட்டுவிட்டுப் போனாய் அல்லவா?"

"ஆமா!"

"கொலையாளிக்கும் - கோமாவில் ஆழ்த்தப்பட்டு மரணமடைந்தவர்களுக்கும் - இடையே கம்ப்யூட்டர் முக்கியமான ரோல் வகிச்சிருக்குன்னு நம்பினேன் டியாரா. இன்டாநெட் தொடர்புன்னா கம்ப்யூட்டர் இணைப்பு பாலமாக கன்ட்ரி வொய்டு சர்வர் இருப்பார்., ஆராய்ச்சி மையத்தின் கம்ப்யூட்டர்கள் மையத்துக்குள்ளேயே இணைக்கப்பட்டிருந்தன. சர்வர் கம்ப்யூட்டர் தியானேஸ் வரனுடையது, அவரும் இறந்தார். ஸோ... கொலையாளி மையத்தின் இருபது கம்ப்யூட்டர்களுடன் திருட்டுத் தனமாகத் தொடர்வு வைத்திருந்திருக்க வேண்டும். மையத்தின் பக்கத்துக் கட்டடத்தின் கிரவுண்ட் ப்ளோர் பிளாட்டைக் கொலையாளி வாடகைக்கு எடுத்துக்கொண்டு

தரைக்கு அடியே கேபிள் புதைத்து மைய கம்ப்யூட்டர்களுடன் தொடர்பு கொண்டிருப்பான் எனச் சந்தேகப் பட்டேன்!"

"பிரில்லியன்ட்!"

"டெமலிஷன் ஸ்குவாடு உதவியுடன் இடிக்கப்பட்ட தரைப்பகுதியில் கேபிள் இணைப்பு கண்டுபிடித்தேன். அந்த கேபிள் போன தரைத்தள பிளாட்டில் ஒரு கண்ணாடி இளைஞன் கடந்த 9 மாதங்களாக வாடகைக்கு இருந்ததை உறுதிசெய்தேன். கம்ப்யூட்டரும் வைத்திருந்திருக்கிறான்!"

"வாவ்!"

அவன் அறைக்குள் இருந்தபோதெல்லாம் கம்ப்யூட்டருடன்தான் விளையாடிக் கொண்டிருந் திருக்கிறான். அவனிடம் லேப்பும் இல்லை. அவன் எந்த வைரஸூம் உருவாக்கவில்லை டியாரா. இது விஷயமே வேறு. அவனின் மேதைமைத்தனம் கத்தி இல்லாமல் இரத்தமில்லாமல் மனிதர்களை இரையெடுத்திருக்கிறது! அவன் பிளாட்டைக் காலி பண்ணிவிட்டு எங்கு. போனான் என்பது யாருக்கும் தெரியவில்லை. மணிமேகலை பல்கலை மாணவன் வர்ணனைப்படி நாம வரைஞ்ச ஐடென்டிகிட் படத்தை பிளாட்வாசிகளிடம் காண்பித்தேன். இரண்டும் ஒருவரே என உறுதி செய்தேன்!"

"சஸ்பென்ஸ்ஸைக் கூட்டிக்கொண்டே போகாதே. கொலையாளியின் இருப்பிடம் கண்டுபிடித்தாயா?"

"கண்டுபிடிச்சிட்டேன்!"

பாய்ந்து முத்தமிடப் போனான்.

"பாராட்டுற சாக்குல இந்த வேலையெல்லாம் வேணாம் தலைவா!"

"சரி.... அவன் பெயர்?"

"மாதேஷ்"

"என்ன பண்றான்?"

"ரொம்ப சிரமப்பட்டுக் கண்டுபிடிச்சிருக்கேன் டியாரா. அவன் படிச்சது எம்.எஸ்.சி. கம்ப்யூட்டர் இன்ஜினியரிங். கிரிமனாலஜி டிப்ளமா வாங்கியிருக்கான். ஸைக்காலஜி படிச்சிருக்கான். பிலாஸபி படிச்சிருக்கான். மாஸ்டர் ஆஃப் ஆல் சப்ஜக்ட்ஸ். வயது 35. கம்ப்யூட்டர் டீலர். பேச்சிலர். அவனது ஒரிஜினல் பங்களா திருவான்மியூர்ல இருக்கு!"



"புறப்படு உடனே!"

இருவரும் காரில் பறந்தனர்

பங்களாவின் போர்டிகோவில் கார் சறுக்கி நின்றது.

உள்ளோடினர் துப்பாக்கிகளுடன்,

""வாங்க டியாரா! வாங்க தேஜிஸ்வினி! இன்னைக்கோ நாளைக்கோ வருவீங்கன்னு யூகிச்சேன். நான்தான் நீங்க தேடுற மாதேஷ்." உக்காருங்க. ஆற அமரப் பேசுவோம். எங்கேவும் ஓடிர மாட்டேன்!

மாதேஷ் கொழு - கொழு 5 அங்குலம் உயரம் குறைந்த அரவிந்த்சாமியாகக் காட்சியளித்தான்.

"நீயா கொலைகாரன்?"

"கொலைகாரன்ற வார்த்தைய வாபஸ் பெறுங்க. இறந்து போன 64 பேரையும் குத்திக் கொன்னேனா - சுட்டுக் கொன்னேனா - விஷம் வச்சு வைரஸ் ஸ்ப்ரே பண்ணி கொன்னேனா? நான் ஒரு அப்பாவி ஜீனியஸ். இந்த உலகத்தில ஜீனியஸாக இருப்பது கிரிமினல் குற்றமா?"

"அவங்களை நீ என்னதான் பண்ணின?"

"அத உங்களால கண்டுபிடிக்க முடியலையா?"

"அவர்களின் மரணத்துக்கு உனது பேச்சுத் திறமை ஒரு காரணமாய் இருந்திருக்கிறது சரியா?"

"சபாஷ்! 90 மார்க் யூகம். RIDDLE னா என்னன்னு தெரியுமா உங்களுக்கு டியாரா?"

"ரிடில்டு புதிர் அல்லது விடுகதை. இரட்டை அர்த்தமோ மறைமுகப் பொருளோ கொண்ட தீவிரவாதிகள் சங்கேத மொழியில் பேசிக் கொள்வது கூட ஒரு வகையில் விடுகதை தான். ஷேக்ஸ்பியர் தனது ஒரு நாடகத்தில் மேக்பெத் மரணத்தை விடுகதையாகக் கூறியிருந்தார். இசை விடுகதை, ஓவிய விடுகதை கூட கேள்விப்பட்டிருக்கேன். சர்ச்சில் கூட ரஷ்யாவை ஒரு முறை மர்மத்தால் பொட்டலம் கட்டப்பட்ட மறைபொருள் என விடுகதை பாணியில் வர்ணித்திருந்தார் போதுமா?"

"நீங்க ஒரு என்ஸைக்ளோபீடியா டியாரா. பிடியுங்கள் பாராட்டை. விடுகதை போட்டுத்தான் 64 பேரை நிலை குலைய வச்சு மரணக் குழில தள்ளினேன். உயர்கலாச்சாரம் உள்ள நாடுகளின்தான் விடுகதைகள் நிறையப் புழங்கும். உலகின் முதல் விடுகதை போட்டது யார் தெரியுமா? ஸ்பைனிக்ஸ் தேவதை. ஈடிபஸ் மன்னனிடம் விடுகதை போட்டது. 'காலைல 4 அடியாக இருப்பான். நண்பகலில் இரண்டடியாக இருப்பான். மாலைல மூன்றடியாக மாறுவான். அவன் யார்?' என கேட்டது. தவறான பதில் சொன்னால் கொன்று விடும். மன்னன் சரியான பதில் சொன்னான். 'காலைல நாலடி - தவழ்ற குழந்தை, நண்பகலில் - வளர்ந்த இளைஞன், மாலையில் மூன்றடி - தடி ஊன்றிய கிழவன்' சரியான பதிலால் ஸ்பைனிக்ஸ் தற்கொலை செய்து கொண்டதாம்மா

"அது மாதிரி?"

"நான் செஞ்சது வேற டியாரா. ஆராய்ச்சி மையத்திலுள்ள மூவரிடமும் கம்ப்யூட்டர் மூலம் தனித்தனியே மூன்று விடுகதைகள் போட்டேன். பதில் யோசித்து யோசித்து மனம் பேதலிச்சு RIDDLE COMA அதாவது விடுகதை மயக்கநிலைக்குப் பாய்ந்தாங்க, நினைவு தற்காலிகமா திரும்புனப்ப எனது அட்டகாசமான விடுகதையை 'ஆஹா'ன்னு பாராட்டிச் செத்தாங்க!"

"மாணவர்கள் 61 பேர்?"

"அவர்களிடம் விரிவுரையாளராகப் போனேன். முதல் அரை மணி நேரம் சுவாரசியமாகப் பேசி அசத்தினேன். அவர்கள் எதிர்பாராத நிமிடத்தில் ஒரு விடுகதையை வீசினேன். ஒட்டுமொத்த வகுப்பும் நிலைகுலைந்து கோமாவில் வீழ்ந்தது!"

"ராமானுஜம்?"

"அவர் நண்பர் எழுதியதாக ஒரு கடிதம் கொடுத்திருந்தேன். கடிதத்தின் கடைசியில் ஒரு விடுகதை. மயங்கி எழுந்த அவர் விடுகதை வாசித்து ரிடில் கோமாவுக்குப் போனார்!"

"புரபஸர் ஐஸக் மனோகர்?"



"அவரது காதில் ஒரு விடுகதையை ஓதினேன். ஆள் கிளீன் போல்ட்!"

"விடுகதைகளுக்கு அவ்வளவு சக்தி உண்டா?"

சிலர் பேசினால் நமக்குத் தலை சுத்தும் தெரியுமா ? சில வாத்தியர் பாடம் நடத்தினாலே தூக்கம் வரும் தெரியுமா டியாரா? ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு லெவல் சிந்திக்கும் சக்தி. விடைகாண முடியாத மூளையைக் குழப்பும் பல விடைகள் தோன்றி மயக்கும் மனித இனம் வாழ்நாள் முழுக்க அமர்ந்து யோசித்தாலும் விடை காண முடியாத விடுகதைகள் ரிடில் கோமாவைத்தான் பரிசளிக்கும். எல்லா விடுகதைகளும் நானே சொந்தமாய்த் தயாரித்தவை. குறுக்கெழுத்துப் போட்டிகளில் ஆர்வமுடையவர்கள், ஆன்மீகத் தேடலில் ஈடுபடுபவர்கள், தத்துவம் பேசுபவர்கள், கணிதத் துறையாளர்கள், மனோ தத்துவ மேதைகள் எளிதாக விடுகதைகளுக்கு இரை யாவார்கள்!"

"நம்பவே முடியவில்லை மிஸ்டர் மாதேஷ்!"

"ரிடில் கோமாவுக்குச் சான்றாக உலகின் பல்வேறு இடங்களிலில் நடந்த சம்பவங்களை என்னால் கூறமுடியும். டியாரா நான் ஒரு சாதாரண மனிதனல்ல. கிரேக்க புராணத்தில் வரும் ஸ்பைனிக்ஸ் தேவதையை விட வல்லவன் . இந்த நூற்றாண்டின் இணையற்ற விடுகதை மன்னன். ரிடில்கோமா - மொழிகளை தலைப்புகளைத் தாண்டி விதிவிலக்கு!"

"ஓ!"

மாண்டி பைத்தான் ஜோக் (MONTY PHTHON) என்று ஒன்று உள்ளது. அந்த ஜோக்கைக் கேட்டவர்கள் எல்லாம் சிரிச்சுச் சிரிச்சே . செத்திருக்காங்க. கவுண்டமணிதான் பில்கிளிண்டன், கென்னத் ஸ்டார் வக்கீல் தான் செந்தில், மோனிகா லெவின்ஸ்க்கிதான் சர்மிலி என வைச்சுக்கிட்டு ஒரு செக்ஸ் ஜோக் தயார் பண்ணினா நிச்சயம் இடைவிடாத சிரிப்புவரும். கவுண்டமணி டயலாக் டெலிவரி உதை மேனரிஸம், அவரது முந்தைய படி சிரிப்புக் காட்சிகள் கிளிண்டனுக்கு மாறி நினைக்கச் சிரிப்பு வரும்!

"ஓ!"

"எனது விடுகதைகள் சாகசத்தில் ஜென் கதைகள் தான் இன்ஸ்பிரேஷன்!"

"அப்டி என்ன விடுகதைகள் சொல்லி அவரவரை அசத்தினாய்?"

"அபாயம் டியாரா. நான் சொன்னா ஒரு வேளை நீங்களும் ரிடில்கோமா நிலை ஆழக்கூடும்!"

தேஜி சொரண்டினாள். "வேணாம் ரிஸ்க் டியாரா!"

"பரவாயில்லை சொல்லு மாதேஷ்!"

"கம்ப்யூட்டர் ஆசாமிகளிடம் சொன்ன மூன்று விடுகதைகள்!"

"ம்!"

"ஒன்று - உண்மை என்ற வார்த்தை எல்லாக் காலத்துக்கும்"

"எல்லா சூழலுக்கும் உண்மையானதா?"

பொய் எப்போது உண்மையாகும்?

உண்மை எப்போது பொய்யாகும்?

"உண்மையும் பொய்யும் கரைந்து எப்போது சூன்யம் நிலைக்கும்?"

யோசிக்க டியாராவுக்குத் தலைசுற்றியது.

"விடுகதை இரண்டு இந்தா வாக்கியத்தில் மூன்று பிழைகள் உள்ளன."

"சரியா? சரி என்றால் எப்படி சரி? தவறென்றால் எப்படி தவறு? சரி என்றும் சொல்லலாம். தவறென்றும் சொல்லாம் என ஒரு பார்வை உண்டா?"

டியாராவுக்குத் தலைசுற்றல் தீவிரம்.

தேஜி எச்சரித்தாள். "கவனம். அவன் சொன்ன விடுகதைகளை அசை போடாதே!"

"தியானேஸ்வனுக்கான விடுகதை - உன் ஆன்மாவைக் கழற்றிவைத்துவிட்டு வாழ வழி உண்டென்றால் ஆன்மா இல்லாமல் ஆயுளுக்கும் வாழ்வாயா? தவறு என்று உறுத்த



ஆன்மா இல்லாத போது செய்யும் பாவங்கள் பாவங்கள் ஆகுமா? ஆன்மா இல்லாதபோதும் செய்யும் பாவங்கள் பாவங்கள்தானே ? ஆன்மா இல்லாதபோது நீ மனிதன் இல்லையே? மிருகமென்றால் நீ என்ன வகை மிருகம்?"

"மாணவர்களிடம்?"

"முத்தமிட்டால் கர்ப்பம் சாத்தியமென்றால்

வாழ்வில் எத்தனை பெண்களை முத்தமிடுவாய்?

ராமானுஜத்திடம்"

"வட்டங்கள் சதுரங்கம் ஆகும்போது

நீள்வட்டம் என்னவாகும்?

வடிவங்களின் தாய் பூஜ்யமா?

பூஜ்யத்தின் மெய்யான மதிப்பென்ன?"

"ஐஸக் மனோகரிடம்?"

"ஆண் கூந்தல் குட்டை - மார்பு சமன் - குறி நீட்டம்.

பெண் கூந்தல் நீளம் - மார்பு புடைப்பு - குறி குழிவு

எது காமத்தின் நதிமூலம், ரிஷிமூலம்?"

தேவாவும், ஸிஜாவும் வந்து சேர்ந்தனர். கைது செய்யும் போது மாதேஷ் "விடுகதை சொன்ன தண்டனை தர இபிகோ எந்தப் பிரிவு சொல்லுது? ரொம்ப ஈஸியா விடுதலை ஆய்டுவேன். போறதுக்கு முன்னாடி டியாராவுக்கு ஒரு விடுகதை - சிவப்பு முயலுக்கு ஐந்து கால்கள், சரியா?"

"தவறு!"

"எப்டி தவறு? வெள்ளை முயலுக்கு நான்கு கால்கள்தானே?"

"சிவப்பு முயலுக்கு அஞ்சுகால் ஏன் இருக்கக்கூடாது?"

"ஆமாம்!"

"என்ன ஆமா? இதுவரை யாருமே சிவப்பு முயலை அஞ்சுகாலோட பாத்ததா ஆதாரம் சொல்லாதப்ப நான் """சொன்னதை நீங்க எப்டி நம்பலாம்?"

"அதானே?"

"என்ன அதானே? உலகின் எந்த முட்டாளும் பாக்காம ஒரு அதிசயம் நடந்துட்டா அதன் அதிசயம்னு ஒத்துக்கக் கூடாதா?"

"ஸ்டாப் இட்! துப்பாக்கியுடன் இடையில் பாய்ந்து கத்தினாள் தேஜி. இந்த வாக்குவாதம் நீண்டா டியாரா நீ ரிடில் கோமால சிக்கி 'மௌத்' ஆய்ருவ ! தேவா! இந்த வார்த்தைகளில் கத்தி செய்யும் ஜித்தனை இழுத்துப்போங்க!"

டியாராவை உலுக்கினாள்.

"அவுனின் நினைப்பை விடு. காட்ஸில்லா போவோம்!"

நீதிபதி தீர்ப்பளித்தார். "இனி ஒரு விடுகதையும் போடாம இருந்தா மாதேஷ் ஆயுள்தண்டனை அனுபவிக் கலாம். மீறி ஒரு விடுகதை போட்டாலும் மரண தண்டனை!"

சிரித்தான் மாதேஷ் "மரணதண்டனையே பரவாயில்லை. ஒரு விடுகதை போடுறேன். விடுவிக்கிறீங்களா?"

'யப்பா!' அலறி சேம்பருக்கு ஓடி மறைந்தார் நீதிபதி!

(முற்றும்)